# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 70 — 1973 ජූලි 27 වැනි සිකුරාදා — 1973.07.27

70 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு யூலை மாதம் 27 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்கெனத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 729 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 743 |


## பதவிகள் — வெற்றிடம்

### இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு எற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்**

1 : 1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். "இலங்கையர்" என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1 : 2 ஏதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப் பதவிக்கு சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனினும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக் குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருக்குமிடத்து, சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ற சிங்களவராக இருப்பின் அவர் சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுக்கு நியமனத்தை நாடும் அத் தகையோருக்கும் இத் தேவை ஏற்புடைத்தாகாது.)

1 : 3 விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகூர்/சோதனைக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட "புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் நியதிகளுக்கமைவாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**2. படிகள்**

2 : 1 அரச சேவையில் உள்ள திருமணமான உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் vii ஆம் அத்தியாயத்தின் I ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.

2 : 2 மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத்தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரையில் (சகல படிகளும் உட்பட) வேதனமாக/கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராகின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவையானவிடத்து சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.

### முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I : தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எம். டபிள்யூ. பி. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசெம்பர் மீ 18 ந் உ.

3. சேவை நிபந்தனைகள் : பொது

3 : 1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக் களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள், ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

3 : 2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

3 : 3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்

4 : 1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :—

4 : 1 : 1 சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய, மூன்று வருடத்துக்குத் தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

4 : 1 : 2 அரசாங்க சேவையில் " புதிதாகச் சேர்ந்த " அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு பயன் ஏற்படும் வண்ணம் இனிமேல் புகுத்தக்கூடிய சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர்.

4 : 1 : 3 சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதிகாண் காலத்தின்போது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

4 : 1 : 4 தகுதிகாண் காலம் நிறைவு எய்திய பின்பு பதவியை உறுதி செய்வது, பிறவற்றுள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முதலாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் இரண்டு வருடத்தினுள் இரண்டாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடத்தினுள் மூன்றும் தரச் சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் தங்கியுள்ளது. ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 4 : 1 : 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும் அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

4 : 1 : 5 தகுதிகாண் நிலைக்கால முடிவு வரையில் சிங்கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத்திறனை அடையாவிட்டால் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 12 : 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரயோகமாகும்.

4 : 1 : 6 சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் மீது 4 : 1 : 3 ஆம் 4 : 1 : 4 ஆம் 4 : 1 : 5 ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப்படமாட்டா.

4 : 1 : 7 அரச சேவையின், நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதி செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்கவேண்டியதில்லை.

4 : 1 : 8 தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

5. நியமன நியதிகள்

5 : 1 அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலாயினும் மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலாயினும் 1.1.72 க்குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்கலாக) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் 6 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறுதியில் கொடுக்கப்படும் திரட்டு வேதனத்தின் 9 சத வீதத்தைக் கொடுத்துதவும். அத்தகைய பதவியை வகிப்பவர் (அவர் விரும்பினால்) அவரது மாதத்திரட்டு வேதனத்திலிருந்து 6 சத வீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்தலாம். ஆனால் அத்தகைய உதவு தொகை மீது அரசாங்கம் எந்தவித தொகையும் செலுத்தாது.

5 : 2 1971.12.31 க்கு முன்பு அரச சேவையில் ஓய்வூதியமுள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள் 1972.1.1 க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தரமான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர்கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுவார். அத்தகைய அரச உத்தியோகத்தர்கள் முன்பு போல விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

6. யுத்த சேவைச் சலுகை

6 : 1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள், அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காது

விடின், 1939 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் உள்ள அச் சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன், அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருநதிருத்தல் வேண்டும்.

**7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்**

**7 : 1** எல்லாத் தகைமைகளேயும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களேப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

**7 : 2** வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

**7 : 3** ஒரு வேட்பாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

**7 : 4** விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப் பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவு செய்யப்பட்ட பின்பு அப் பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

**7 : 5** விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை**

**8 : 1** தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும் ; அதில், பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

---

**கல்வி அமைச்சு**

*தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் சிங்களம் கற்பிப்பதற்காக மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் தராதரப் பத்திரமற்ற உதவி ஆசிரியர்களைச் சேர்த்தல்*

*தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் சிங்களம் கற்பிப்பதற்காக மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் தராதரப் பத்திரமற்ற உதவி ஆசிரியர்களைச் சேர்த்தல் சம்பந்தமாக 1973.04.11 ஆந் திகதியும் 55 ஆம் இலக்கமும் கொண்ட ஸ்ரீ லங்காக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் பால் கவனம் கோரப்படுகிறது.*

*2. அவ்வறிவித்தலின் 5 ஆம் பந்தியில் (ஈ) உப பந்தியின் கீழ் அம்பாறை தேர்தல் தொகுதியில் நிரந்தர வதிவை நிரூபிக்கக்கூடியவர்களுக்கும் கல்முனைக் கல்வி மாவட்டத்திற்குள் நிலவும் வெற்றிடங்களுக்காக மாத்திரம் விண்ணப்பிப்பதற்கு இத்தால் இடமளிக்கப்படுகின்றது. அதற்கமைய 1973.05.01 ஆந் திகதியன்று தேவையான தகைமைகளைப் பூரணப்படுத்தியிருப்பவர்கள் அவ்வர்த்தமானியில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு அமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 1973.08.20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பிரதான கல்வி அதிகாரி, கல்விக் காரியாலயம், கல்முனை" என்னும் விலாசத்துக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.*

*பீ. உடகம,*
*செயலாளரும் கல்வி மா அதிபரும்.*

*கல்வி அமைச்சு,*
*மலாய் வீதி,*
*கொழும்பு 2.*
*1973 ஜூலை மாதம் 12 ஆந் திகதி.*

7-889—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

**சிறுகைத்தொழிற்றிணைக்களம்**

*வடிவ அமைப்பு உதவியாளர் பதவிகள் (தற்காலிகம்)*

சிறுகைத்தொழிற்றிணைக்களத்தில் வடிவ அமைப்பு உதவியாளர் பதவிகட்கான விண்ணப்பங்கள் இலங்கைக் குடிகளிடமிருந்து கோரப்படுகின்றன. கீழ்க் காணப்படும் மாதிரிப் படிவத்தினைதைப் போன்ற படிவத்திலமைந்த விண்ணப்பங்கள் 1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ந் தேதியன்றோ அதன்முன்போ என்னை வந்தடைதல் வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம் .—** இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 4,152—144 தர 16—ரூபா 6,456 ஆகும். வினைத் திறமைகாண்தடை ரூபா 5,304 க்கு முன்பாகும்.

3. **நியமன நியதிகள்.—**

பதவிகள்
- (அ) தற்காலிகமானவை
- (ஆ) உபகாரச் சம்பள உரித்தற்றவை
- (இ) அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவு தொகை செலுத்தப்பட வேண்டும்.

4. ஒவ்வொரு விண்ணப்பகாரரும், தான்—

(அ) (i) சிங்களம்/தமிழ், எண்கணிதம், கணிதம், சித்திரம் உட்பட ஆறு பாடங்களில் இருதடவைகட்கு மேற்படாது தோற்றிக் கல்விப் பொதுத்தராதர (சாதாரணம்) ப் பத்திரப் பரீட்சையிற் சித்தியெய்தியுள்ளாரெனவும் ;

அல்லது

(ii) அதற்குச் சமானமான அல்லது உயர்ந்த பரீட்சையிற் சித்தியெய்தியுள்ளாரெனவும் ;

(ஆ) கைத்தறி நெசவில்/துணி அச்சடிப்பதில் மூன்று வருட அனுபவமுள்ளவரெனவும் ;

(இ) மிகச சிறந்த குணப்பண்பும் உடனலமுள்ளவரெனவும்,

(ஈ) 1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ந் தேதியன்று 20 வயதுக்குக் குறைந்தவரல்லரெனவும் 35 வயதுக்கு மேற்பட்டவரல்லரெனவும் (இம்மேல்வயதெல்லை ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ளோர்க்கு ஏற்புடைத்தன்று) திருப்திகரமான சான்று சமர்ப்பித்தல் வேண்டும்.

5. விண்ணப்பக்காரர்கள் தமது விண்ணப்பங்களுடன் கீழ்க்காணும் சான்றிதழ்களின் படிகளை இணைத்தல் வேண்டும். (இப்படிகள் திருப்பிக் கொடுக்கப்படமாட்டா)

(அ) பிறப்புச் சான்றிதழ் (**கவனிக்கவும்.—** ஞானதீட்சைச் சான்றிதழ்களோ அன்றி உதவி பெறும் பாடசாலைகளின் பிரமாணச் சட்டக் கோவையின் நோக்கத்திற்கிணங்க வழங்கப்படும் சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(ஆ) மிகவுயர்ந்த கல்வித்தகைமைச் சான்றிதழ்.

(இ) மிக அண்மைக் காலத்திற் பெற்ற மூன்று குணச்சான்றிதழ்கள்.

(ஈ) தொழின்முறைத் தகைமை அல்லது தொழினுட்பத் தகைமை அன்றி இவையிரண்டுக்குமுரிய சான்றிதழ்கள்.

**கவனிக்கவும்.**—வேண்டப்படும்போது ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் வேட்பாளர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற் கெடுக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சி மன்றங்களிற் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தந்திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. கொழும்பில் நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சையொன்றுக்கு விண்ணப்பகாரர்கள் தமது சொந்தச் செலவிலேயே சமுகமளித்தல் வேண்டும்.

8. விண்ணப்பத்திற் கொடுக்கப்பட்ட விபரங்கள் சரியற்றவையெனத் தெரிவுக்கு முன் கண்டு பிடிக்கப்படின் விண்ணப்பகாரர் தகைமையற்றவராகக் கருதப்படுவதுடன் தெரிவுக்குப் பின் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கம் செய்யப்படுதற்கும் ஆளாவார்.

9. வர்த்தமானியின் பகுதி I பிரிவு (IIஅ) ன் முற்பகுதியில் வெளியிடப்பட்டுள்ள அரசசேவைப் பதவிகட்காய நியமனங்கட்கு ஏற்புடைய பொது நிபந்தனைகட்குத் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

ஜி. பி. ஹத்தொட்டுவ,
பிரதிப் பணிப்பாளர் (முகாமை),
சிறு கைத்தொழிற் பணிப்பாளருக்காக.

சிறுகைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு யூலை மீ 17 ந் உ.

**சிறு கைத்தொழிற்றிணைக்களம்**

தற்காலிக வடிவ அமைப்பு உதவியாளர் பதவிகட்கான மாதிரி விண்ணப்பப்படிவம்

(**கவனிக்கவும்.**—விண்ணப்பத்தைத் தாங்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் " தற்காலிக வடிவ அமைப்பு உதவியாளர் பதவிகட்கான மாதிரி விண்ணப்பப் படிவம் " எனக் குறிக்கப்பட்டு, அது பதிவுத் தபாலில் சிறு கைத்தொழிற் பணிப்பாளர், ஹேமாஸ் கட்டிடம், கொழும்பு 1 என முகவரியிடப்பட வேண்டும்).

1. முழுப் பெயர் :————.

2. முகவரி : ————.

3. பிறந்த திகதியும் இடமும் : ————.
(பிறப்புப் பதிவுச் சான்றிதழின் படி இணைக்கப்பட்ட வேண்டும்)

4. நாட்டினம் : ————.

5. மணமானவரா, தனியாளா : ————.

6. கல்வித் தகைமைகள் அல்லது தொழில் முறைத் தகைமைகள் அல்லது இவையிரண்டும் : ————.

7. கல்விக் கூடத்தைவிட்டு விலகியதிலிருந்து செய்த தொழில் அல்லது பெற்ற பயிற்சிகளின், அல்லது இவையிரண்டினதும் விபரங்கள் : ————.

8. அரசாங்க திணைக்களமொன்றிலோ, கூட்டுத்தாபனமொன்றிலோ கடமையாற்றியிருப்பின் தொழிலை நிறுத்தியதற்கான காரணங்கள் கூறப்பட வேண்டும் : ————.

9. எப்பொழுதாவது குற்றவியற்றவறெதற்காகவேனும் ஒரு நீதிமன்றத்தில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் அக்குற்றத்தினதும் தண்டனையினதும் விபரங்களைக் குறிப்பிடவும் : ————.

10. குணச்சான்றிதழ்கள் பெறப்பட்ட மூவரின் பெயர்களும் பதவிப் பெயர்களும் :

1. ————.
2. ————.
3. ————.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

7–988—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

**இலங்கைக் கடற்படைத் தொண்டர் கடற்படையில் அரசாணையமர்வுக்களுக்கான வெற்றிடங்கள்**

இலங்கைத் தொண்டர் கடற்படையில் அரசாணையமர்வுகளுக்கான வெற்றிடங்கள் உள.

2. தொண்டர் படையில் அரசாணையமர்வுகளுக்கு விண்ணப்பிக்கும் அபேட்சகர்கள் பின்வரும் தகைமைகளை உடையவர்களாக இருத்தல் வேண்டும் :—

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) 1973 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆம் திகதி 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(இ) கடற்படைத் தளபதியினால் விதிக்கப்படும் அத்தகைய வைத்திய பரீட்சையில் சித்திபெறக் கூடிய உடற்றகுதி உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) க.பொ.த.(உயர்தர) அல்லது சமமான அல்லது உயர்தர பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு.—(i) விண்ணப்பதாரர் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரச கரும மொழிச்சட்டக் குறிப்புடன் தொடர்பான அரசாங்கத்தின் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்கத் தயாராக இருத்தல் வேண்டும்.

(ii) கடல்சார்ந்த தொழில்களில் தொழில்நுட்ப, பொதுச் சேவைகளில் ஈடுபட்டுள்ள ஆட்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(iii) விவசாயத்தில் தகுதித் தேர்வினை (டிப்ளோமா) (பேராதனை விவசாயப்பாடசாலை) அல்லது விவசாயத்தில் உயர்தர பரீட்சையில் சித்தியினை பெற்றுள்ள அபேட்சகர்களும் விண்ணப்பிக்கலாம்.

3. சாதாரண காலங்களில் தொண்டர் கடற்படை அலுவர் ஒருவர் சில பயிற்சி அணிவகுப்புகளுக்கும் 14 நாட் கொண்ட ஆண்டுப் பாசறை ஒன்றுக்கும் பங்குபற்றும்படி வேண்டப்படுவர்.

4. பிரதானமாகக் கைச்செலவுகளை நிவிர்த்தி செய்யவெனத் தொண்டர் கடற்படை அலுவலர் ஒருவருக்குத் தொண்டர் கடற்படை ஒழுங்கு விதிகளுக்கு இணங்கக் குறிப்பிட்ட சில வரும்படிகள் வழங்கப்படும்.

5. தொண்டர் கடற்படையையும் கடற்படைச்சட்டத்தையும் செயற்படுத்திக் கொண்டிருக்கும் ஒழுங்கு விதிகளினால் பொதுச் சேவை நியதிகள் கையாளப்படும். ஈடுபடுத்தப்பட்ட கடமையின் முழுநேரக் காலங்களின் போது இலங்கைச் சட்டவாக்கங்களில் மீளவாயப்பட்ட பதிப்பின் 358 ஆம் அத்தியாயமான கடற்படைச் சட்டத்தின் 7 ஆம் 16 ஆம் பிரிவுகளின் நியதிகளுக்கு இணங்க ஒரு தொண்டர் ஈடுபடுத்தப்பட்ட கடமைக்குப் பொறுப்புடையவராக இருப்பார். நிரந்தர கடற்படை அலுவலருக்கு ஏற்புடையதான அதே சம்பளங்களும் படிகளும் தொண்டர் கடற்படை அங்கத்தவர்களுக்குக் கொடுக்கப்படும்.

6. இவ்வெற்றிடங்கள் தொண்டர் கடற்படையில் உளவென்றும், நிரந்தர கடற்படையில் அல்லவென்றும், இத்தெரிவானது வேதனம் அளிக்கப்படும் நிரந்தர தொழிலுக்கு அமையாதென்றும் வலியுறுத்தப்படுகின்றது.

7. விண்ணப்பதாரரைத் தனிப்பட்ட முறையில் அறிமுகமான பொறுப்புடைய ஆட்களிடமிருந்து சென்ற இரண்டு ஆண்டுகளுள் பெறப்பட்ட ஆகக் குறைந்தது இரண்டு நற்சாட்சிப்பத்திரங்களை யாவது விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும்.

8. தொகையான விண்ணப்பங்கள் கிடைக்குமிடத்து மேலே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த அபேட்சகர்களுக்கிடையே முதற் தெரிவு ஒன்று நடத்தப்படும். இவ்வபேட்சகர்களின் நேர்முகப்பரீட்சைக்குப் பின்னர் இறுதித் தெரிவு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவுச் சபையினாலே நிகழ்த்தப்படும். நேர்முகப்பரீட்சைகளுக்குத் தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களுக்கு அத்தகைய நேர்முகப்பரீட்சைகளுக்குரிய இடம், திகதி, நேரம் என்பன எழுத்துமூலம் அறிவிக்கப்படும். இந்நேர்முகப்பரீட்சைகள் கொழும்பில் நடைபெறும். இது சம்பந்தமாக பிரயாணச் செலவுகளோ அல்லது பிற செலவுகளோ அரசாங்கத்தால் கொடுக்கப்படா. தெரிவுச் சபையினால் நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவு செய்யப்படாத அபேட்சகர்களும் அறிவிக்கப்படுவார்கள்.

9. இதோடு கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைந்தவாறு விண்ணப்பங்களைத் தயாரித்து, ஏவல் அலுவலர், தொண்டர் கடற்படை, கொச்சிக்கடை, கொழும்பு 13 என்னும் முகவரிக்கு அனுப்பப்படவேண்டும். விண்ணப்பம், தபாலுறையில் இடது

பக்க மேல் மூலை என்னும் இரண்டிலும் "தொ.க.ப. அரசாணைய மர்வுகளுக்கான விண்ணப்பங்கள்" என்று அவர்கள் குறிப்பிட்டெழுத வேண்டும். விண்ணப்பங்கள் 1973 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆம் திகதிக்கு முன்னர் தொண்டர் கடற்படைத் தலைமை அலுவலகத்திற்குக் கிடைக்க வேண்டும்.

ட. பீ. குணசேகரா,
கொமொடோர்,
கடற்படைத் தளபதி.

கடற்படைத் தலைமை அலுவலகம்,
த. பெ. இல. 593.
கொழும்பு.
1973.7.12.

**தொ. க. படையில் அரசாணையமர்வுக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் (பெரிய எழுத்துக்களில்) :————.
2. தபால் முகவரி :————.
3. கிட்டிய தபால்/தந்தி அலுவலகம் :————.
4. கிட்டிய பொலிஸ் நிலையம் ————:
5. பிறந்த திகதி ————: வயது :————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்)
6. நாட்டினம் :————.
7. தரைப்படை (யுத்தச்சேவையுட்பட), கடற்படை, விமானப் படை, தொண்டர்படை என்பனவற்றில் முன்னர் சேவையாற்றியிருந்தால், பதவிகளும் திகதிகளும் கொண்ட முழு விபரங்கள் :————.
8. விடுவித்தல் அல்லது சேவை நிறுத்தலின் போது நடத்தை (விடுவித்தல் அல்லது சேவை நிறுத்தலுக்கான சான்றிதழின் பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்.) :————.
9. பாடங்களுடன் திகதிகளுடனும் சித்தி எய்திய பரீட்சைகள் (கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.) :————.
10. உயரம் :———— அடி :————. அங்குலம் :————.
11. நீர் விவாகமானவரா அல்லது தனியாளா :————.
12. பாடசாலையில் அல்லது பல்கலைக்கழகத்தில் நீர் பெற்றுள்ள விளையாட்டுச் சாதனைகள் என்ன :————.
13. பாடசாலையில் அல்லது பல்கலைக்கழகத்தில் உமது திறமையைக் காட்டும் வேறு அருஞ்செயல்கள் என்ன :————
14. உமது பாடசாலை அல்லது பல்கலைக்கழகத்தின் நிலை பற்றிய பின்வரும் விபரங்களைத்தருக :—

    பாடசாலை அல்லது பல்கலைக்கழகத்தின் பெயர் :————.

    சேர்ந்த திகதி :————.

    விலகிய திகதி :————.

    சித்தி எய்திய பகிரங்கப் பரீட்சைகள் :————.
15. பாடசாலையை அல்லது பல்கலைக்கழகத்தை விட்டு விலகிய காலத்திலிருந்து உமது தொழில் பற்றிய பின்வரும் விபரங்களைத்தருக :—

    வேலை கொள்பவரின் பெயரும் முகவரியும் :————.

    தொழிலின் தன்மை :————.

    காலம்———— இருந்து———— வரை.

    (தற்போது வேலை கொள்பவரிடமிருந்து தொண்டர் கடற்படையில் சேருவதற்குச் சம்மதத்துடன் பெறப்பட்ட ஒரு கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.)
16. நற்சான்றுப்பத்திரங்கள் பெறப்பட்ட ஆட்களின் பெயர்களும் முகவரிகளும் :————.
17. விண்ணப்பதாரரினால் உறுதிப்படுத்தலானது கையொப்பமிடப்படுதல் வேண்டும் :

மேலே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு என்னால் கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் சரியானவை என்று என் சத்தியத்தின் பேரில் உறுதிப்படுத்துகிறேன்.

————,
**விண்ணப்பகாரரின் கையொப்பம்.**

திகதி :————.

7-855—27.07.73 ந திகதிய வர்த்தமானி இல. 70

---

**ஆயுள்வேத திணைக்களம்**

**ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி (ஆயுள்வேத இலக்கியம்) பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுள்வேத ஆராய்ச்சிக்கழகம், நாவின்னை**

ஆயுள்வேத திணைக்களத்தின் பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுள்வேத ஆராய்ச்சிக் கழகத்தின் ஆராய்ச்சி உத்தியோகத்தர் (ஆயுள்வேத இலக்கியம்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் கீழே தரப்பட்டுள்ளதைப் போன்ற படிவத்தில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் திகதிகளன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், சுகாதார அமைச்சு, கொழும்பு 1 என்ற விலாசத்துக்கு வந்து சேரவேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 17.08.1973

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 24.08.1973

**குறிப்பு**

(i) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது என்ற குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புதற்குக் கடைசி நாட்கள் வரை தாமதிப்பவர்கள் அதனால் ஏற்படும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.

(ii) வெளிநாட்டிலுள்ள வேட்பாளர்கள் விரும்பினால் தாம் வதியும் நாட்டிலுள்ள அல்லது அதற்கண்மை நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்தில், சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அனுப்புமாறு குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் விண்ணப்பப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

[(iii) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெற வெளிநாட்டில் தேர்ந்தெடுக்கப்படும் இலங்கையரான உத்தியோகத்தர்கள், சேவைக்கு உடற்தகுதி உடையவரென்பதை உறுதிப்படுத்தற் பொருட்டு, அங்கீகாரம் பெற்ற மருத்துவத் தொழில்புரிவோரால் சோதிக்கப்படுதற்கு, அவர்கள் பிரசன்னமாகுமாறு வேண்டப்படுவர். இத்தகைய சோதனைக்கான கட்டணமும், இலங்கைக்கு, வருதற்கு ஏற்படும் பயணச் செலவும் உத்தியோகத்தராலேயே செலுத்தப்பட வேண்டும்.

2. **ஒப்பந்த நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.**—(i) பதவி நிரந்தரமானது. அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவு தொகைகள் செலுத்தப்பட வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படும் வேட்பாளருக்குத் தனிப்பட்ட முறையில் வைத்தியத் தொழில் புரியும் உரிமை இருக்கமாட்டாது.

3. **சம்பள விகிதம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள விகிதம் வருமாறு :—ஆண்டொன்றுக்கு ரூபா 6,720—12 × 360 உம் 11 × 480—ரூபா 16,320. ரூபா 11,520 க்கும் ரூபா 14,880 க்கும் முன்னர் திறமை காண் தடைகளுண்டு. ஆண்டொன்றுக்கு ரூபா 11,520 பெறுதற்கு முன்னர் உள்ள திறமைக்காண் தடைக்கு மீதான பதவி ஏற்றம் ஆயுள்வேதத்தில் பட்டத்துக்குப் பின்னைய படிப்புத் தகைமைகளைக் கொண்டு நிர்ணயிக்கப்படும். ஆண்டொன்றுக்கு ரூபா 14,880 பெறுதற்கு முன்னர் உள்ள திறமைகாண் தடைக்கு மீதான பதவி ஏற்றம் திணைக்களத்தலைவர் தரும் பணி, ஒழுக்கம் பற்றிய சான்றிதழைப் பொறுத்திருக்கும்.

4. **வேண்டப்படும் கல்வித் தகைமைகள்.**—ஒவ்வொரு வேட்பாளரும் பின்வருவனவற்றைத் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவ வேண்டும் :—

(அ) சிறந்த நற்குணமும் நல்ல உடற் சுகமும் பெற்றிருத்தல் ;

(ஆ) 27.07.1973 ஆம் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் (இத்திணைக்களத்தில் உள்ளவர்களுக்கு மேல்வயதெல்லை ஏற்புடைத்தன்று) ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஆயுள்வேத போதனை நிறுவகத்தின் முதலாம் வகுப்பு சிறப்பு டிப்ளோமா பெற்றிருத்தல் ;

(ஈ) ஆயுள்வேதத்தில் பட்டத்துக்குப் பின்னைய தராதரங்கள் பெற்றிருப்பதுடன், ஆயுள்வேதம் சம்பந்தமாக ஆரம்ப ஆராய்ச்சி செய்ததன் பொருட்டுப் பெயர்பெற்றிருத்தல் அல்லது ஆயுள்வேதம் சம்பந்தமாக பல பிரசுரங்களை வெளியிட்ட உன்னத சாதனை ;

(உ) பாளி மொழி அறிவுடன் சமஸ்கிருதத்தில் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்புப் பட்டம் பெற்றிருத்தல் ; அல்லது பட்டத் தரத்தில் சமஸ்கிருதம், பாளி ஆகிய மொழிகளில் அறிவு பெற்றிருத்தல் ; அல்லது பட்டத்தரத்தில் சமஸ்கிருதம், பாளி ஆகிய மொழிகளில் அறிவு பெற்றிருத்தல்.

5. பின்வரும் பத்திரங்களில் எவற்றையேனும் அல்லது எல்லாவற்றையேனும் கேட்கப்படும்போது சமர்ப்பிக்குமாறு வேட்பாளர்கள் வேண்டப்படுவர்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு.—ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைப் பிரமாணங்களுக்கு அமையக் கொடுக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) ;

(ஆ) பட்டப்படிப்பு அல்லது ஆக்கக்கூடிய கல்வித் தகைமைச் சான்றிதழ் ;

(இ) குணச் சான்றிதழ்கள் இரண்டு. இவற்றில் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி அதிபர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர்தொழிற் தகைமைச் சான்றிதழ் அல்லது தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ் அல்லது இவை இரண்டும் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்துள்ள மிகவுயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு :

(i) பத்திரங்களோ அல்லது பத்திரங்களது படிகளோ விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படக்கூடாது ;

(ii) பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் போது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் வேட்பாளர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் உள்ள உத்தியோகத்தரகளது விண்ணப்பங்கள் திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவர்கள் ஊடாக அனுப்பப் படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறெந்தக் கடிதத் தொடர்புகளும் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு விலாசமிடப்பட வேண்டுமே தவிர மற்றெந்த உத்தியோகத்தருக்கும் அல்ல.

8. இந்த வர்த்தமானியில் பகுதி I, பிரிவு (IIஅ) இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவி நியமனங்களுக்கு ஏற்புடையனவாகிய பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப்படுகிறது.

சி. ஈ. எஸ். வீரதுங்க,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஜூலை மீ 17 ந் உ.

இல. :
(அலுவலக பாவிப்புக்கு மாத்திரம்)

**சுகாதார அமைச்சு**

**விண்ணப்பப் படிவம்**

1. விண்ணப்பிக்கும் பதவி : ————.
........................பதவி
........................திணைக்களம்

2. முழுப் பெயர் : ————.
(தெளிவான எழுத்துக்களில்)

3. அஞ்சல் முகவரி : ————.
(முகவரியில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்க வேண்டும்)

4. பிறந்த திகதி : —
வருடம் : ————. மாதம் : ————. திகதி : ————.

5. உள்நாட்டு விண்ணப்பங்கள் முடிவுறும் திகதியின் சரியான வயது : —
வருடங்கள் :— மாதங்கள் :— நாட்கள் :—

6. நீர் ஓர் இலங்கைப் பிரஜையா ? வம்சாவழியினலா அல்லது பதிவினலா என்பதைக் குறிப்பிடுக : ————.
(தயவு கூர்ந்து குறிப்பு 2 ஐக் கவனிக்க)

7. பிறந்த இடம் : —
(தயவு கூர்ந்து குறிப்பு 2 ஐக் கவனிக்க)
(அ) விண்ணப்பதாரர் : ————.
(ஆ) தந்தை : ————.
(இ) தந்தைவழிப்பாட்டன் : ————.
(ஈ) தந்தைவழிப்பூட்டன் : ————.

8. (அ) பால் : ————.
(ஆ) திருமணமானவர், தனியானவர், தாரமிழந்தவர் : ————

9. பின்வருவனவற்றில் சித்தி எய்திய உயர் பரீட்சைகள் :—
(அ) சிங்களம், (ஆ) தமிழ், (இ) ஆங்கிலம்
(1)————.
(2) ————.
(3) ————.

10. 12 வயது தொடக்கம் சென்ற பாடசாலைகள், கல்லூரிகள், பிறதாபன தாபனங்கள் ஆதியன : —

பொதுக் கல்வி

| | பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

உயர் தொழிற் கல்வி

| | தாபனம் | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

11. விளையாட்டுக்களில் பெற்ற சிறப்புக்களும் இத்துறையில் வகித்த பொறுப்பான பதவிகளும் : ————.

12. (அ) நீர் பணமுடை ஏதுவும் இல்லாதவரா ? முடை இருப்பின் எவ்வளவுக்கு ? : ————.

(ஆ) நீதிமன்றம் ஒன்றில் குற்றவியற் குற்றமெதுக்கும் நீர் குற்றஞ் சாட்டப்பட்டவரா ? அவ்வாறுயின் திகதி, வழக்கு இலக்கம் ஆதிய வற்றேறு முழு விபரங்களையும் தருக : ————.

13. உயர் கல்வி, உயர் தொழில், தொழில் நுட்பத் தகைமைகள் : ——— (பட்டங்கள், சிறப்புக்கள், உயர்தொழில், அல்லது இரண்டினதும் தகைமைகளைத் திகதி, வகுப்பில் சித்தி பெற்றிருப்பின் அவை, பாடங்கள், நிலையங்களின் பெயர்கள் ஆகிய விபரங்களோடு தருக)

14. தற்போதைய தொழிலும், முன்னர் செய்த தொழில் ஏதுமிருப்பின் அதுவும் (தொழிலில் சேர்ந்த, விலகிய திகதிகளும்) பெற்ற ஆண்டுச் சம்பளமும் கொடுக்கப்படுதல் வேண்டும் : ————.

**முக்கியம் :**— அரசாங்கத் தொழிலைவிட்டு விலகிய காரணத்தை இதன் கீழுள்ள 16 ஆம் கூண்டில் குறிப்பிடவும்.

| | பதவி | தொடக்கம் | வரை | ஆண்டுச் சம்பளம் ரூபா |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |
| 6. | | | | |
| 7. | | | | |
| 8. | | | | |

15. **சிறப்புத் தகைமைகள்:**— அறிவித்தலிலுள்ள சிறப்புத் தகைமைகள் அல்லது அனுபவம் அல்லது இரண்டும் உடையவரா ? அவ்வாறு உடையவராயின் அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புத் தேவைகளைப் பார்க்க) :—

16. மேலும் விபரங்கள் ஏதுமிருப்பின் : ————.

17. இந்த விண்ணப்பத்தில் என்னால் அளிக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதன் கண் உள்ள விபரங்கள் எவையும் பொய்யானவை அல்லது பிழையானவை எனத் தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து தகைமை நீக்கஞ் செய்யப்படுதற்கும் தெரிவுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து நட்ட ஈடு எதுவுமின்றி வேலைநீக்கஞ் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதனை யான் அறிவேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ————.

**குறிப்புகள்**

(1) பதிவு காரணமாக இலங்கைப் பிரஜையாயின் தொடர் எண்ணையும் பிரஜாவுரிமைச் சான்றிதழின் திகதியையும் குறிப்பிடுக.

(2) விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) உடன் (ஆ) அல்லது (இ), (ஈ) ஆகிய இரண்டும் நிரப்பப்படல் வேண்டும். அவர் இலங்கையில் பிறக்காதவராயின் (அ) வைவிட (ஆ) அல்லது (இ), (ஈ) நிரப்பப்படல் வேண்டும்.

வேட்பாளர் அரசாங்க சேவையிலுள்ளவராயின் திணைக்களத் தலைவரின் அறிக்கை.

திணைக்களத் தலைவரின் பெயரும் பதவிப் பெயரும்.

திகதி : ————.

7—959—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

### பெருந்தோட்டத் தொழில் அமைச்சு

*பணியாளர் உறவு உத்தியோகத்தர் பதவி*

பெருந்தோட்டத் தொழில் அமைச்சில் பணியாளர் உறவு உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலுக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில் செயலாளர், பெருந்தோட்டத் தொழில் அமைச்சு, த. பெ. இல. 1652, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு 1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படவேண்டும்.

**குறிப்பு :**

(i) கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்களை அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனால் ஆகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**

(i) பதவி நிரந்தரமானதும் சேமலாப நிதிக்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் தனது முழுத் திரட்டு சம்பளத்தில் 6% தை அரசாங்க சேவை சேமலாப நிதிக்கு உதவு தொகையாக செலுத்தப்பட வேண்டும். அரசாங்க உதவுதொகை முழுத்திரட்டு சம்பளத்தில் 9% ஆகும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் அரசாங்கத்தின் கீழ் 1971 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ந் திகதியன்று நிரந்தரமானதும் உபகாரச் சம்பளத்திற்கு உரிமையுள்ள பதவியை வகித்தவராயும் இருந்தால் அவர் ஓய்வூதிய அடிப்படையில் நியமனம் செய்யப்படுவர்.

**3. சம்பளமும் ஏனைய படிகளும்.**— இப்பதவிக்குரிய சம்பளத் திட்டம் பின்வருமாறு :—

**திரட்டிய சம்பளம்.**— வருடத்திற்கு ரூபா 5,736—6 × 144—8 × 180 யும் 6 × 240 உயர்வுகளைக் கொண்டதுமான ரூபா 9,480 (ரூபா 6,312 க்கும் ரூபா 7,500 க்கும் முன்னர் வினைத்திறமை காண் தடையுண்டு.)

**குறிப்பு.**—விசேட அனுபவமுள்ள விண்ணப்பதாரரொருவர் தெரிவு செய்யப்படுமிடத்து அவரது அனுபவத்திற்கும் திறனுக்குமேற்ப, தாபன பணிப்பாளரது அங்கீகாரத்துடன் தகுதியான சம்பள நிலையில் அமர்த்தப்படுவார். ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து அவரது சம்பளம் தாபனக் கைநூலின் VII அத்தியாயம் 9 ம் பிரிவின் பிரகாரம் நிர்ணயிக்கப்படும்.

**4. தேவைப்படும் தகைமைகள்.**— ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும் :—

(i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவராக அல்லது சட்ட அறிஞராகத் தொழில் செய்வதற்காய கல்வி அருகதையைப் பெற்றவராக அல்லது அரசாங்கத்தின் கீழ் 10 வருடத் திருப்திகரமான சேவை செய்த சிரேஷ்ட பாடசாலை தராதரப் பரீட்சையில் அல்லது பொதுக் கல்வித் தராதரப் பரீட்சையில் (சாதாரண தரம்) 6 பாடங்களில், சிங்களம்/தமிழ், எண்கணிதம்/கணிதம்/வர்த்தக கணிதம், உட்பட 6 பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாத முறைகளில் சித்திபெற்றவராகவும் இருத்தல்.

(ii) விண்ணப்ப முடிவுத் திகதியில் 30 வயதுக்குக் குறையாதவராயும், 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளோருக்கு இவ்வயதெல்லைகள் ஏற்புடைத்தாகா.)

(iii) நல்லொழுக்கமும் உடலுறுதியும் உடையவராயிருத்தல் வேண்டும்.

5. பின்வரும் சாதனங்களில் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ கேட்கப்படும்பொழுது சமர்ப்பிக்கும்படி விண்ணப்பதாரர் வேண்டப்படுவர் :—

(அ) பிறப்புச்சான்றிதழ் (ஞானஸ்நானச் சான்றிதழ்களோ அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணங்களின் நோக்கத்திற்கு அமைய வழங்கப்பெற்ற பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

(ஆ) உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) இரு நற்சான்றிதழ்கள்.

**குறிப்பு :**

(i) சாதனங்கள் எவையும் விண்ணப்பப் பத்திரத்துடன் அனுப்பப்படக் கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரரின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள அல்லது கூட்டுத்தாபனங்களில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் திணைக்கள அல்லது கூட்டுத்தாபன தலைவர்களுக்கூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களோ அல்லது அவை சம்பந்தமாக கடிதத் தொடர்புகளோ பெருந்தோட்டத் தொழில் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்படவேண்டுமேயொழிய இவ்வமைச்சில் உள்ள எந்த உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்புதல் கூடாது.

8. இவ்வர்த்தமானியின் I ம் பகுதி (IIஅ) ம் தொகுதியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

டொறிக் த சூஸா,
செயலாளர்,
பெருந்தோட்டத் தொழில் அமைச்சு.

பெருந்தோட்டத் தொழில் அமைச்சின் அலுவலகம்,
த. பெ. இலக்கம் 1652,
6, சேர் பாரன் ஜயத்திலக்க மாவத்தை,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு யூலை மாதம் 13 ந் திகதி.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

*பணியாளர் உறவு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்*

**பெருந்தோட்டத் தொழில் அமைச்சு**

(இவ்விண்ணப்பப் படிவத்துடன் எந்தவொரு சாதனமும் இணைக்கப் படுதல் கூடாது)

1. முழுப் பெயர் (உறுப்பெழுத்தில்) :————.

2. அஞ்சல் முகவரி :————.
(முகவரியில் ஏற்படும் மாற்றங்கள் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்)

3. (அ) பிறந்த திகதி :—

வருடம் :——. மாதம் :——. தேதி :——.

(ஆ) விண்ணப்ப முடிவுத் தேதியில் சரியான வயது :—

வருடங்கள் :——. மாதங்கள் :——. நாட்கள் :——.

4. வம்சாவழி காரணமாகவா, அல்லது பதிவு காரணமாகவா இலங்கைப் பிரசையெனக் குறிப்பிடுக :————.

(பதிவு காரணமாக இலங்கைப் பிரசையெனின் விவரங்களைத் தருக)

5. பிறந்த இடம் :—

(அ) விண்ணப்பதாரர் :————.

(ஆ) விண்ணப்பதாரரின் தந்தை :————.

(இ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப்பாட்டன் :————.

(ஈ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப்பூட்டன் :————.

6. திருமணமானவரா, தனியாளா, விதவையா அல்லது தாரமிழந்தவரா எனக் குறிப்பிடுக :————.

7. பின்வரும் பாடங்களில் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சை :—

(i) சிங்களம் :————.

(ii) தமிழ் :————.

(iii) ஆங்கிலம் :————.

8. 12 வயதிலிருந்து நீர் கல்விபெற்ற பாடசாலைகள், கல்லூரிகள், ஏனைய நிறுவனங்கள் :

| பொதுக்கல்வி | | உத்தியோகக் கல்வி | |
|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் வரை | கல்வித்தாபனம் | தொடக்கம் வரை |
| 1. | | 1. | |
| 2. | | 2. | |
| 3. | | 3. | |

9. நீர் கடன் தொல்லைகள் அற்றவரா ? :————.

இல்லையெனின், கடன் பொறுப்புகளின் தொகை என்ன ? :————.

10. சட்ட நீதிமன்றத்தில் ஏதாவது குற்ற பாதகத்திற்குக் குற்றம் சாட்டப்பட்டுள்ளீரா ? அப்படியானால் வழக்கு இலக்கத்தைக் குறிப்பிட்டு, தேதிகளோடு முழு விபரங்களையும் தருக :————.

11. பாடசாலைக் கல்வி, உத்தியோகக் கல்வி, நுண்தொழிற் கல்வித் தகைமைகள் :————.

(பல்கலைக் கழகத்துச் சகல பட்டங்கள், திறமைகள், உத்தியோகக் கல்வி/நுண்தொழிற் கல்வித் தகைமைகள், விசேட வகுப்புப் பட்டங்களாயின் அவற்றின் விபரங்கள், தோற்றிய பாடங்கள், நிறுவனங்களின் பெயர்கள் என்பவற்றைத் தேதிகளுடன் தருக.)

12. தற்போதைய தொழிலும், முன்னர் பதவிகளில் இருந்தால், அவற்றின் விபரங்களும் :—

| | பதவி | தொடக்கம் வரை | ஆண்டுச் சம்பளம் ரூபா |
|---|---|---|---|
| (1) | | | |
| (2) | | | |
| (3) | | | |

(அரசாங்க உத்தியோகத்திலிருந்து நீங்கிய காரணம் கீழேயுள்ள 12 ஆம் நிரப்புப் பிரிவிற் குறிப்பிடப்படல் வேண்டும்.)

13. மேலும் வேறு விபரங்கள் :————.

14. உம்மைப்பற்றிய விபரங்களைப் பெறக்கூடிய உமக்கு அறிந்த இருவரின் பெயர்களையும் முகவரிகளையும் தருக :————.

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவை என்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, அல்லது சரியற்றவையென்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனுக்கப்படுவேனென்றும், நியமனம் பெற்றபின் சரியற்றவை என்று கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி பதவியால் நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

தேதி :————.

7–878—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

எனது இல. ஈஓஜே 20/72.

**சுகாதாரத் திணைக்களம்**

தொழிலாளி பதவி—தரம் V (நாய் பிடிப்பவர்)

சுகாதாரத் திணைக்களத்தில் V ஆம் தர தொழிலாளி பதவிக்கு (நாய் பிடிப்பவர்) கீழ்க்காணும் தகைமைகளையுடைய இலங்கையரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தினைப்போன்ற படிவத்தில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் 15.8.1973 ஆம் திகதி அன்றோ அதற்கு முன்னரோ, பொது சுகாதார மிருக வைத்திய அதிகாரி, தொற்று நோயியற் பிரிவு, என். ரி. ஐ. கட்டடம், டீன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்படுதல் வேண்டும்.

2. **சம்பள விகிதம்.**—ரூ. 2,100–5 × 54—2,370 (வருடாந்த ஒன்று திரட்டப்பட்ட சம்பளம்)

3. இந்த நியமனம் சேமலாபநிதி அடிப்படையைக் கொண்டதாகும்.

4. **வயது.**—18 வயதுக்குக் குறையாதவராகவும், 35 வயதுக்கு மேற்படாதவராகவும், நல்ல உடற்சுகம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **கல்வித் தகைமை.**—எழுத, வாசிக்கத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.

6. **அனுபவம்.**—நாய் பிடிப்பதில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னிடம் கொடுக்கப்படும்.

7. விண்ணப்பதாரர்கள், தங்கள் விண்ணப்பங்களுடன் இரு நற்குணச் சான்றிதழ்களை இணைத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று அவரது பகுதியின் கிராம சேவையாளரிடமிருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

ஜி. அமரசேன,
பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்),
சுகாதார சேவைப் பணிப்பாளருக்காக.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

1. பெயர் : ————.

2. வயது : ————.

3. பிறந்த திகதி : ————.

4. முகவரி : ————.

5. அனுபவம் : ————.

6. நற்சான்றிதழ்கள் தந்தோரின் பெயர்களும் முகவரிகளும் : ————————.

மேலே என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் நான் அறிந்தவரையில் உண்மையானவையும் சரியானவையும் என உறுதிப்படுத்துகிறேன்.

————————.
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ————.

7–954—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

### அனுராதபுர மாவட்டத்தில் (பளலுவெவ) களாகம் பலாத்த பிரிவிற்கு முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி

களகம் பலாத்த பிரிவிற்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சில காலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடிய விவாகமாகிய மனைவியர் உயிருடன் இருக்கும் ஆண் முஸ்லிம்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின் பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இவ்வலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும் கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிமன்ற அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், நகர்காவலர் அலுவலகங்களிலும், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத் தாபன நிலையங்களிலும், இப்பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1973 ம் ஆண்டு ஆவணி மாதம் 31 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தர்மசிறி ஜயசேன,
மேலதிக மாவட்டப் பதிவாளர்,
மாவட்டப் பதிவாளருக்காக.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
அனுராதபுரம்,
1973 ஆண்டு ஆடி மாதம் 10 ம் உ.

7–862—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

### இலங்கை மத்திய வங்கி

#### உயர் பதவி வகுப்பு வெற்றிடங்கள்

இலங்கை மத்திய வங்கியின் உயர்பதவி வகுப்பிற்கான முதலாந் தராதர நியமனத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

3. **குறைந்தளவு தகைமைகள்.**—விண்ணப்பதாரர்கள் கீழ்த்தரப்படும் தகைமைகள் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(1) பொருளாதாரம், கணிதவியல், புள்ளிவியல், வர்த்தகம், பொது நிருவாகம், வியாபார நிருவாகம் ஆகிய பாடங்களுள் ஏதாவதொன்றில், தகுதிபெற்ற பல்கலைக்கழகமொன்றிலிருந்து முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பிற் சிறப்புப் பட்டம் அத்துடன் /அல்லது

(2) வங்கி நிருவாகப் பதவிகளில் முன்னேற்றப் பொறுப்பாகப் பெற்ற அனுபவம்.

**குறிப்பு :** மேலே 1 இல் குறிப்பிட்டுள்ள பாடங்களில் விசேட பட்டப்பரீட்சைக்குத் தோன்றியவர்கள் பரீட்சை முடிவின் வெளியீட்டை எதிர்பார்த்திருக்கையில் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். அப்படியான விண்ணப்பதாரர்கள் பரீட்சை முடிவு தெரிந்தவுடன் அதனை அறிவிக்க வேண்டும்.

4. **சம்பளம்.**—புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் பொதுவாகத் தகுதிகாண் உயர்பதவிப் பணியாளராக ரூ. 655 சம்பளத்தில் முதலில் நியமிக்கப்படுவார். தகுதிகாண் காலம் ஈராண்டுகளாகும். தகுதிகாண் காலம் திருப்திகரமாக முடியுமிடத்து இவர்கள் உயர்பதவி வகுப்பின் முதலாம் தராதரத்துக்கு மாதாந்தம்—

$$\frac{\text{ரூ. } 790\text{—ரூ. } 1102.50}{1 \times 42.50 \text{ உம் } 6 \times 45}$$

என்ற சம்பளத்தில் நியமிக்கப்படுவர்.

தேர்ந்தெடுக்கப்பட்டோர் சிறப்புத் தகுதியுடையோரெனக் கருதப்படுமிடத்து மேலே தரப்பட்ட சம்பளத்திட்டத்தில் உயர்பதவி வகுப்பின் முதலாம் தராதரத்துக்கு நேரடியாக நியமிக்கப்படுவர். ஆனால் இவ்வழக்கிலும் ஓராண்டுத் தகுதிகாண் காலம் விதிக்கப்படும்.

5. இதற்கு மேலாக திருமணப்படியும் (திருமணமாயிருப்பின்) கொடுக்கப்படும்.

6. விண்ணப்பப் படிவங்களும், மேலும் விபரங்களும் இலங்கை மத்திய வங்கியின் நிறுவனத் திணைக்களத்துடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (விண்ணப்பப் படிவங்கள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டுமாயின் சொந்த முகவரியிடப்பட்டு முத்திரையிடப்பட்ட நீண்ட அஞ்சல் உறையொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)சகல விண்ணப்பங்களும்—

நிறுவனப் பணிப்பாளர்,
இலங்கை மத்திய வங்கி,
அ. பெ. 590,
கொழும்பு 1.

என முகவரியிடப்பட்டு, அஞ்சலுறையின் மேல் இடது மூலையில் "உயர்பதவி வகுப்பு வெற்றிடங்கள்" எனத் தெளிவாக எழுதி, 1973 ஒகத்து, 10 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னரோ அவரை அடையும்வண்ணம் அனுப்பப்படுதல் வேண்டும்.

நிறுவனப் பணிப்பாளர்.

7–1012—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

### இலங்கை அரசாங்கப் புகைவண்டித் திணைக்களம்

#### வரைவுபயிலுநர் பதவிகள் (சிவில்)

இலங்கை அரசாங்கப் புகைவண்டித் திணைக்களத்தின் இருப்புப் பாதைக் கட்டுவேலை உப திணைக்களத்தில் வரைவு பயிலுநர் (சிவில்) பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்ட மாதிரிப் படிவம் போன்றவற்றில் விண்ணப்பங்கள் எழுதப்பெற்று எனக்கு 1973 ம் ஆண்டு ஆவணி மாதம் 10 ம் திகதியில் அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கும்படியாக அனுப்பப்பட வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**—இப்பதவிக்குரிய ஆண்டுத் திரட்டிய சம்பளம் 3,090—90—3,180 ரூபாவாகும். (69.10.01 ம் திகதிக்கு முன்னர் இப்பதவிக்குரிய சமமான உத்தேச அடிப்படைச் சம்பளம் 1,032—72—1,104 ரூபாவாகும்.)

3. **சேவை நிபந்தனைகள்**—

(i) இப்பதவி தற்காலிகமானது. அரசாங்க சேவை சகாய நிதிக்கு உதவுதொகைகள் செலுத்தப்பட வேண்டும். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பகாரர்கள் இரு ஆண்டு காலம் பயிற்சிபெற வேண்டும்.

(ii) விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சைகளில் சித்தியடைவதுடன் பயிற்சிபெறும் காலத்தில் இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் (இலங்கைப் பல்கலைக் கழகம்—கட்டுப்பெத்தை வளாகத்தில்) மாலை வகுப்புகளுக்கும் வருகைதந்து விதிக்கப்பட்ட பரீட்சைகளிலும் அவர்கள் சித்தியடைய வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்பட்டு நியமனம் பெற்றவுடனடியாக விண்ணப்பக்காரர்கள் பயிற்சி முடிவடைந்து தரம் II வரைஞராக நியமனம் பெற்ற பின்னர் 15 ஆண்டு காலம் இலங்கை அரசாங்கப் புகைவண்டித் திணைக்களத்தில் கடமையாற்ற வேண்டுமென முறியொன்றில் கையொப்பமிட்டு ஒப்பந்தமொன்று செய்துகொள்ள வேண்டும்.

(iv) திருப்தியற்ற நடத்தை, தனது பயிற்சியில் திருப்திகரமான முன்னேற்றம் அடையப்பெறுமை, திணைக்கள, தொழில்நுட்பக் கல்லூரிப் பரீட்சைகளில் சித்தியடையத் தவறியமை, பயிற்சியைத் தொடர்ந்து நடத்துதல் திணைக்கள நலனுக்கு அவசியமற்றது போன்ற வேறு எக்காரணங்கள் பொருட்டும் பயிலுநர் ஒருவரின் ஒப்பந்தம் முன்னறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.

(v) நியமனத்திற்கு முன்னர் அவர்கள் நியம கண்பார்வை பரீட்சையில் தேர்ச்சிபெற வேண்டும்.

(vi) பயிற்சிக் காலத்தைத் திருப்திகரமாகப் பூர்த்திசெய்து விதிக்கப்பட்ட பரீட்சைகளில் சித்திபெற்ற பயிலுநர்கள், 3,432—114—6,456 ரூபா (திரட்டிய) சம்பளத் திட்டத்தில் தரம் II வரைஞர்களாக நியமிக்கப்படுவார்கள். வரைஞர் தரத்தில் வெற்றிடங்கள் இல்லாதிருந்தால் அவர்கள் மிகைநிலை வரைஞர்களாகச் சேவையில் வைத்திருக்கப்படுவார்கள்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் தான் பின்வரும் தகைமையுடையவர் என்பதற்குச் சான்று காட்ட வேண்டும் :—

(அ) நற்குணம் உடையவராயும் உடல்நலமுள்ளவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 73.07.10 ஆந் திகதியில் 16 வயதிற்கு குறையாதவராயும் 24 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

(இ) (i) தூயகணிதம் அல்லது பிரயோககணிதமும் பௌதிகவியலிலும் உட்பட சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது ;
(ii) சிங்களம்/தமிழ்மொழி, தூயகணிதம் அல்லது பிரயோக கணிதம், பௌதிகவியல் ஆகியவை உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாமல் கல்விப் பொதுத் தராதர (சாதாரணப்) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்;

அல்லது

(iii) தூய அல்லது பிரயோக கணிதத்துடன் ஒரு உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஈ) (i) பிரயோக தொழில்நுட்பவியல் நிலையத்தில் (இலங்கைப் பல்கலைக் கழகம்—கட்டுப்பெத்தை வளாகத்தில்) வரைஞருக்கான ஓராண்டு முழு நேர வகுப்புகளுக்குச் சமூகம்தந்து வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த பின்னர் அதில் தேர்ச்சியடைந்தமைக்கான சான்றிதழொன்றை உடையவராக இருத்தல் வேண்டும்.

(ii) கண்டி அல்லது யாழ்ப்பாணத்திலுள்ள கனிஷ்ட தொழில்நுட்பவியல் கல்லூரியில் வரைஞருக்கான ஓராண்டு முழு நேர வகுப்பில் பயிற்சிபெற்று வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த பின்னர் தேர்ச்சி பெற்றமைக்கான சான்றிதழை உடையவராக விருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பக்காரர் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் பிரதியையும் இணைத்து அனுப்புதல் வேண்டும் :—

(i) அண்மையிற் பெற்றுக்கொள்ளப்பட்ட மூன்று நற்குணச் சான்றிதழ்கள்.
(ii) பிறப்புச் சான்றிதழ்.
(iii) உயர்தரக் கல்விச் சான்றிதழ்கள்.
(iv) வரைவியலில் தேர்ச்சிச் சான்றிதழ்.

**குறிப்பு** —பிரதிகள் மீளளிக்கப்படமாட்டாது.

6. இவ்வர்த்தமானியின் பகுதி I பிரிவு (IIஅ) தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளின் மீது கவனம் கோரப்படுகின்றது.

வி. ரி. நவரட்ன,
பொது முகாமையாளர்.

பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை அரசாங்கப் புகைவண்டித் திணைக்களம்,
கொழும்பு 10,
1973 ம் ஆண்டு யூலை மீ 17 ந் உ..

### மாதிரி விண்ணப்பப் படிவம்

(முக்கியம்—விண்ணப்பங்கள் பொது முகாமையாளர், இலங்கை அரசாங்கப் புகையிரதத் திணைக்களம், கொழும்பு 10 என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் வைக்கப்பட்டுள்ள அஞ்சல் உறையின் இடதுபக்க மேல் மூலையில் " வரைவுப் பயிலுநர் (சிவில்) பதவிக்கான விண்ணப்பம் " என எழுதப்படல் வேண்டும்.)

1. முழுப்பெயர் : ————.

2. முகவரி : ————.

3. (i) பிறந்த திகதியும் இடமும் : ————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்)
(ii) 1973 ம் ஆண்டு ஆவணி மாதம் 10 ம் திகதியில் வயது :—
ஆண்டு :————. மாதம் :————. நாள் :————

4. தேசிய இனம் : ————.

5. திருமணமானவரா ? திருமணமாகாதவரா ? : ————.

6. (i) கல்விச் சான்றிதழ்கள் : ————.
(ii) தொழில்நுட்பத் தகைமைகள் :————.
(மேலே குறிப்பிடப்பட்ட (i) (ii) என்பனவற்றை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

7. பாடசாலையிலிருந்து விலகிய பின் ஈடுபட்டிருந்த தொழில்/வாழ்க்கைத் தொழிற் கல்வியின் விபரங்கள் : ————.

8. முன்னர் அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது அரச கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றியிருந்தால் தொழிலிலிருந்து விலகியமைக்கான காரணங்கள் : ———— .

9. சட்ட நீதிமன்றத்தில் குற்றவியல் குற்றங்களுக்காக குற்றவாளியெனத் தீர்ப்புக் கூறப்பட்டிருந்தால் குற்றத்தினதும் தண்டனையினதும் விபரங்களைக் குறிப்பிடுக : ————.

10. நற்குணச் சான்றிதழ்களை வழங்கிய மூவரின் பெயர்களும் பதவிகளும் : ————.

————,
விண்ணப்பக்காரரின் ஒப்பம்.

7—963—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

எண் : பொ. நி. 20/243

### கல்வி அமைச்சு

பண்ணை முகாமையாளர் பதவி—ஆசிரியர் கலாசாலைகள்

கல்வி அமைச்சின் கீழுள்ள ஆசிரியர் கலாசாலைகளில் பண்ணை முகாமையாளர் பதவிகளுக்குப் பின்வரும் தகைமை கொண்ட அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப் பெற்ற விண்ணப்பங்கள் 1973.08.10 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "செயலாளர் (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

2 **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவி நிரந்தரமானது. நியமனம் சேமலாப நிதி அடிப்படையில் அமையும். நியமதாரி தனது சம்பளத்தில் 6 வீதத்தை அரசினர் சேவைச் சேமலாப நிதிக்குச் செலுத்த வேண்டும். அரசாங்கம் செலுத்துவது 9 வீதம் ஆகும்.

(ii) அரசகரும மொழித் தேவைக்கமைய நியமதாரி புதியமுறைப்படி நியமிக்கப்படுபவராயின் தகுதிகாண் காலம் மூன்றாண்டுகளாகும்.

(iii) அரசினர் சேவையிலுள்ள நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு பதில் கடமை புரிபவராக அவர் நியமிக்கப்படுவார்.

(iv) ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை, செய்முறைப் பரீட்சை ஆகியவை மூலம் நடைபெறும்.

3. **சம்பளமும் படிகளும் :** இப்பதவிக்குரிய திரட்டிய சம்பளத் திட்டம் பின்வருமாறாகும் : ரூ. 3,864—144/18—180/4—ரூ. 7,320.

**குறிப்பு**.—திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தாத பட்சத்தில் நியமதாரிகள் ரூ. 4,008—சம்பளத்திற்கு அப்பால் செல்ல முடியாததுடன் அவர்களின் சேவை நிரந்தரமாக்கப்படும் வரை ரூ. 4,150—வருடச் சம்பளத்தை தாண்டவும் முடியாது.

4. **கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் :**

(i) விண்ணப்பங்கள் முடிவுறும் தேதியன்று விண்ணப்பதாரி 25 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும் (ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு இந்த உயர் வயதெல்லை அமையாது)

(ii) சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உள்ளவராய் இருக்க வேண்டும்.

(iii) க. பொ. த. ப. பரீட்சையில் சித்தி அல்லது எண்கணிதம்/கணிதம் சிங்களமொழி/தமிழ்மொழி ஆகியவையுட்பட 6 பாடங்களில் க. பொ. த. (சாதாரணதர) பத்திர பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தி அல்லது வேறு உயர் பரீட்சையில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

(iv) பேராதனை அல்லது குண்டசாலையில் விவசாயப் பயிற்சி அல்லது ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்தில் விவசாயத்தில் இருவருட பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

(v) 5 ஆண்டுகளுக்குக் குறையாத காலத்துக்கு ஒரு பண்ணையை அதன் முகாமையாளராய் இருந்து நடத்திய அனுபவமும் விவசாயப் பாடசாலையொன்றில் படிப்பித்த அனுபவமும்.

குறிப்பு.—சிங்கள மொழி மூலம்/தமிழ் மொழி மூலம் கடமையாற்றக்கூடிய சிறந்த மொழி அறிவு பெற்றிருக்க வேண்டும். ஆயினும், கல்வி அமைச்சின் செயலாளரும் கல்வி மா அதிபதியும் (குறிப்பிட்ட ஒரு கால வெல்லையுள் குறிப்பிட்ட ஒரு மட்டத்தில்) சிங்கள மொழித் தேர்ச்சி பெறுமாறு எவரையும் பணிக்கலாம்.

5. விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் சாதனங்களில் எதையேனும் எல்லாவற்றையேனும் வேண்டப்படும் நேரத்தில் சமர்ப்பிக்க ஆயத்தமாயிருக்க வேண்டும் :—

(அ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திரம்.

(ஆ) 4 ஆம் பந்தியிற் குறிப்பிட்ட தராதரப் பத்திரங்கள் ;

(இ) சிங்களத்தில் சித்தியெய்திய ஆகக் கூடுதலான பரீட்சைத் தராதரப் பத்திரம்

(ஈ) பிறப்புச் சான்றிதழ்.

குறிப்பு.—(i) சாதனங்களையோ அவற்றின் பிரதிகளையோ விண்ணப்பத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) வேண்டப்படும்போது சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறுவோரின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படமாட்டா.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தத்தம் திணைக்கள/நிலையத் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் அத்தகைய விண்ணப்பங்கள் விதிக்கப்பட்ட திகதிக்குமுன் உரிய திணைக்கள/நிலையத் தலைவரால் பெறப்பட்டு தாமதத்துக்கான போதிய காரணம் காட்டி அவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தலைவரால் சிபார்சு செய்யப்பட்டாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. இவ்வர்த்தமானியில் I ஆம் பகுதி, (IIஅ) ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையும் அரசினர் சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்கு உங்கள் கவனம் கோரப்படுகின்றது.

8. விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுதற்கான கடைசித் திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றிய அறிவித்தலை பெறத் தவறும் விண்ணப்பதாரி ஒருவர் அதனை கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

செயலாளர்.
கல்வி அமைச்சு.

பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1973 ம் ௵ ஜூலை ௴ 27 ந் உ.

My No. GA/20/243

**(மாதிரி விண்ணப்பப் படிவம்)**

($8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவு அரைத் தாளில் தயாரிக்கப்பட வேண்டியது)

**கல்வி அமைச்சின் கீழுள்ள ஆசிரியர் கலாசாலைகளில் பண்ணை முகாமையாளர் பதவி**

1. பெயர் (முதலெழுத்துகளுடன்) : திரு————.
2. முழுப்பெயர் : ————.
3. உத்தியோக முகவரி :————.
4. சொந்த முகவரி :————.
5. (அ) இலங்கையரா ?
   (ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா ? :————.
6. பிறந்த திகதி : வருடம் :————. மாதம் :————. நாள் :————.
7. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி சரியான வயது : வரு :————. மா : ————. நா :————.
8. தற்போதைய பதவி பற்றிய விபரங்கள் :—
   (அ) பதவி :————.
   (ஆ) நிரந்தரமா தற்காலிகமா ? :————.
   (இ) ஓய்காரச் சம்பள உரித்துடையதா அற்றதா ? :————.
   (ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றீரா ? :————.
   (உ) திணைக்களம் :————,
   (ஊ) நிலையம்/வேலை இடம் :————.
   (எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் :————.
   (ஏ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டத்திலான தற்போதைய படி :————.

9. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் :

| | பரீட்சை | வருசம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

10. உயர்தொழில்/தொழில்நுட்பத் தகைமைகள் பற்றிய விபரங்கள் :

| | தராதரப் பத்திரம் | வழங்கியவர் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |

11. பொதுக் கல்வி கற்ற நிலையங்கள் :

| | நிலையம் | வகுப்பு | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |
| 6. | | | | |
| 7. | | | | |

12. தொழில்நுட்ப/உயர்தொழில் கல்வி கற்ற நிலையங்கள் :—

| | நிலையம் | பின்பற்றிய பயிற்சி நெறி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |

13. முன்னைய நியமனங்கள் (காலவரன் ஒழுங்கில் சுருக்கமாகக் கொடுபட வேண்டியது)

| | திணைக்களம் | நிலையம்/வேலை இடம் | பதவி | நிரந்தரமா தற்காலிகமா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |
| 5. | | | | | | |
| 6. | | | | | | |

14. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டா ? :————. (அங்ஙனமாயின், விபரங்களைக் கொடுக்கவும்)

15. விண்ணப்பதாரி அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டவரா ? (அங்ஙனமாயின், விபரங்கள் கொடுக்கவும்) :————.

16. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :

(பகுதி/நிலையத் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்)

உங்கள் எண் : பொ. நி. 20/243
எனது எண் :

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

விண்ணப்பம், விண்ணப்பங்கள் முடிவடைவதற்கான திகதியின் முன்/பின் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

..............இலக்கப் பந்திகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவை/பின்வரும் திருத்தங்கள் உட்பட சரியானவை* விண்ணப்பம் இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றது.

பகுதி/நிலையத் தலைவரின் கையொப்பம்.

திகதி :

*பொருத்தமற்றதை கீறிவிடுக.

2–967—27.07.73 ம் திகதிய வர்த்தமானி இல. 70

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வெற்றிடங்கள்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கணக்காளர் பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகளும் அனுபவமும்.**—இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர் நிலையத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் தகைமை பெற்றிருப்பின் குறைந்தது 3 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது ;

இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் கணக்காளர் டிப்ளோமா தகைமை பெற்றிருப்பதுடன் தகைமையின்பின் குறைந்தது 8 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

பட்டம் பெற்றவராக இருப்பின் அது மேலதிக தகைமையாகக் கருதப் படும்.

அரசாங்கக் கூட்டுத்தாபனம் அல்லது ஒரு பெரிய நிறுவனத்தில் கணக்காளர் அனுபவம் பெற்றிருப்பின் அனுகூலமாகும்.

**வயது.**—35 ற்குள்.

**சம்பளம்.**—ரூபா 1,000—1,500 (50 × 10) எல்லாப் படிகளும் உட்பட.

கீழ் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக மா அதிகாரி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு 7 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " கணக்காளர் " என தெளிவாகக் குறிக்கப்படல் வேண்டும்.

ஒஸ்வால்ட் திலகரத்ன,
மா அதிகாரி.

கொழும்பு 7,
1973 ம் ஆண்டு ஜூலை மீ 12 ந் வ.

#### மாதிரி விண்ணப்பப் படிவம்

கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் : ————.
   (1) முதலெழுத்துக்களுடன் பெயர் : ————.
   (திரு. திருமதி அல்லது செல்வி என்பதை குறிப்பிடவும்)
   (2) முகவரி : ————.
2. பிறந்த திகதியும் இடமும் : ————.
   (1) 10.08.1973 ல் வயது :—
   வரு. : ————. மா. : ————. நா. : ————.
   (பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)
3. தேசிய இனம் : ————.
4. கல்வியும் பயிற்சியும் :—

| கற்ற பாடசாலைகளும் நிலையங்களும் | திகதி இருந்து வரை | சித்தியடைந்த பரீட்சைகள் | நடவடிக்கைகளும் வகித்த பொறுப்பு வாய்ந்த பதவிகளும் |
|---|---|---|---|
| | | | |

5. (அ) மொழிகளில் அடைந்துள்ள தேர்ச்சி :
   (1) சிங்களம் : ————.
   (2) தமிழ் : ————.
   (3) ஆங்கிலம் : ————.
   (ஆ) கணக்கியலில் பெற்றுள்ள தகைமைகள் : ————.
   (சான்றிதழ்களின் பிரதிகள் மட்டுமே இணைக்கப்படுதல் வேண்டும்)
6. அனுபவம் : ————.
7. உமது சொந்த வாழ்க்கையில் நன்கு பரிச்சயமுள்ள உறவினர்களல்லாத மூன்று நடுவர்களின் பெயர்கள், முகவரிகள், அந்தஸ்து ஆகியவை
   1.
   2.
   3.
8. நற்சான்றிதழ் யாரிடமிருந்து பெறப்பட்டதோ அவர்களின் பெயர்களும் பதவிகளும் :
   1.
   2.
   3.
9. வேறு ஏதாவது விபரங்கள் : ————.

நான் இவ்விண்ணப்பத்தில் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்கள் யாதேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படுமிடத்து, அப்பிழை நான் தெரிவு செய்யப்படுதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்குப் பாத்திரமாவேன் என்பதையும் நியமனம் பெற்ற பின்னர் அப்பிழை கண்டு பிடிக்கப்பட்டால், நட்டஈடு எதுவுமின்றிப் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு நான் பாத்திரமாவேன் என்பதையும் அறிவேன்.

————,
திகதி : ————. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

7–1011—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

இல : வெமு. 2/244

### கல்வி அமைச்சு

யப்பான் அரசாங்கத்தால் வழங்கப்படும் புலமைப்பரிசில்கள்—1974 ஆம் ஆண்டு

யப்பான் அரசாங்கத்தால் பின்வரும் துறைகளிலான கற்கைக்கு அல்லது ஆராய்ச்சிக்கு வழங்கப்படும் பட்டப்பின் புலமைப் பரிசில்களை அளித்தற் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

எந்திரவியல்
கமத்தொழில்
கடற்றொழிலியல்
மனைசார் விஞ்ஞானம்

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வருக்கப்பட்டுள்ளன.

**குறிப்பு 1.**—புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ஆந் திகதிய 514 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

**குறிப்பு 2.**—சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ஆம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

**குறிப்பு 3.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

**2. கால எல்லை.**—இப்புலமைப் பரிசில் சாதாரணமாக 1974 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் தொடக்கம் இரண்டு வருடகால அளவினதாக அல்லது 1974 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் ஒன்றரை வருடகால அளவினதாக இருக்கும்.

எனினும், துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு யப்பான் அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின் போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

**3. தகவுத்திறன்.**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் :—

(i) ஸ்ரீ லங்கா பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1974.4.1 அன்று 35 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும். (அதாவது 2.4.39 அன்று அல்லது அதன்பின் பிறந்தவர்களாக இருக்க வேண்டும்)

(iii) விரும்பும் கற்கைத் துறையில் பட்டப்பின் கற்கைகளுக்குப் பொருத்தமுடையதும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்டதுமான ஒரு பட்டமேனும் பெற்றிருக்க வேண்டும். (பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்பவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(iv) யப்பான் மொழியைக் கற்க விருப்பமுடையவராக இருக்க வேண்டும். (யப்பான் மொழியே போதனு மொழியாகும்).

**குறிப்பு 1.**—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.4.1974 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

**குறிப்பு 2.**—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப் படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ஆம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) யப்பானுக்கு போய்த் திரும்புதற்கு சுற்றுப் பிரயாணத்தார் வகுப்பில் விமான மூல பயணச் செலவு.

(ஆ) மாதாந்தம் 79,500 யென் உதவிப்படி.

(இ) யப்பானுக்குப் போய் சேர்ந்ததும் 25,000 யென்னுக்குக் குறைந்த ஒரு தொகை சகாயப்படி.

(ஈ) வெளிக்களக் கற்கைகளுக்கு வருடாந்தம் ஏறக்குறைய 35,000 யென் சகாயப்படி.

(உ) கற்கைக் கட்டணம், பரீட்சைக் கட்டணம் ஆகியவற்றிலிருந்து தவிர்வு.

(ஊ) இடவசதிகள்.

**குறிப்பு.**—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்விதச் செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், யப்பானுக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) ஸ்ரீ லங்கா குடியரசின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக ஸ்ரீ லங்கா குடியரசுக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) ஸ்ரீ லங்கா குடியரசுக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்தியப் பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் யப்பானில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்வதற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேறவேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால், அரசாங்க உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில், கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார். ஏனையோரைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து திரும்பியதும் அவர்களுக்கு உத்தியோகம் அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கவில்லை.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின அவைகளை ஏற்றுக்கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்பட்டவேண்டிய விண்ணப்பங்கள் 1973.8.10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1973 ம் ௵ ஜூலை ௴ 17 ந் ௳.

7–965—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

## கல்வி அமைச்சு

### கட்புல, செவிப்புல உதவியாளர் பதவிகள்

கல்வி அமைச்சின் கீழுள்ள கட்புல, செவிப்புல உதவியாளர் பதவிகளுக்கு கீழே விதிக்கப்பட்டுள்ள, தகைமைகளைப் பெற்றுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறைக்கமைய விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு "செயலாளர் (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு 1973 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 21 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச் சம்பள உரித்தற்றவையுமாகும். அரசாங்க சேவைச் சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

(ii) அரசாங்க சேவைக்கு அரசகரும மொழிக் கொள்கைத் தேவைகளின் நோக்கங்களுக்கமையப் புதிய முறைப்படி நியமிக்கப்படுவோரைப் பொறுத்தளவில் தகுதிகாண் காலம் மூன்று வருடங்களாகும்.

(iii) அரசாங்க சேவையிலுள்ள நிரந்தர பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஓர் உத்தியோகத்தர் தெரிவுசெய்யப்படுமிடத்து அவருடைய நியமனம் விதிக்கப்படும் ஒரு காலத்துக்குப் பதில் கடமை முறையில் அமையும்.

(iv) நியமதாரிகள் தீவின் எப்பகுதியிலும் கடமைபுரிய வேண்டும்.

(v) தெரிவு ஒரு நேர்முகப் பரீட்சை மூலம் நடைபெறும்.

**3. சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய, வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறுரும் :—

ரூபா 3,864—18/144—ரூபா 6,456 (1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 1,620—18/120—ரூபா 3,780 ஆகும்.

**4. தேவைப்படும் தகைமைகள்.**— விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்பவராகத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசாங்க சேவையில் ஏலவே உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ii) கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் இரண்டில் சித்தியுடனும் யாதேனும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடனும் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

அல்லது ;

கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் இரண்டில் சித்தியுடனும் யாதேனும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடனும் மொழி (சிங்கள அல்லது தமிழ்) உட்பட 6 பாடங்களில் க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சையில், இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றிச் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

அல்லது ;

இவற்றிற்குச் சமனான அல்லது உயர்ந்த தகைமைகள் பெற்றிருக்க வேண்டும்.

(iii) பின்வரும் கட்புல, செவிப்புல உபகரணங்களை இயக்கும் தத்துவங்கள் அவற்றைப் பேணல், பழுதுபார்த்தல், இத்தகைய உபகரணங்களையும் கருவிகளையும் இயக்குதல் ஆகியவை தொடர்பான சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும் :—

35 மி.மீ. படமெறிகருவி
வழுக்கிப் படமெறிகருவி
மேலிருமை காட்டி
பாட்டுத் தட்டியக்கி
நாடாப் பதியி
16 மி.மீ சலனப்பட, ஒளி எறிகருவி.

(iv) சலனப்பட எட்டகவேலை பற்றிய சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(v) மேலுள்ள (iii) ஆம், (iv) ஆம் உப பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள வேலையில் ஐந்து வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(vi) ஒளிப்படவியலில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு.—கல்வி அமைச்சின் தலைமை அலுவலகத்திலும் பிரதேச கல்வித் திணைக்களங்களிலும் உள்ள பணியாளர்களுள் சலனப்பட இயக்குநராக அல்லது சலனப்பட உதவி இயக்குநராக 10 வருடங்களுக்குக் குறையாத சேவை புரிந்திருப்பவர்களும் (iii) தொடக்கம் (vi) வரையுள்ள உப பந்திகளில் விதிக்கப்பட்டுள்ள தகைமைகளையும் பெற்றுள்ளவர்களுமானவர்கள், (ii) ஆம் உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமையைப் பெற்றிராவிடினும் சீர்தூக்கப்படுவார்கள்.

(vii) சிறந்த ஒழுக்கமும் உடல்நலமும் உடையவராயிருக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரி ஒவ்வொருவரும், வேண்டப்படும் நேரத்தில் பின்வரும் சாதனங்களில் எதையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) அதியுயர்ந்த கல்வித் தகைமைச் சான்றிதழ் ;
(ஆ) அதியுயர்ந்த உயர்தொழில் தகைமைச் சான்றிதழ்.
(இ) கட்புல, செவிப்புல வேலையிலும் சலனப்பட எட்டக வேலையிலும் பெற்றுள்ள அனுபவத்தை நிரூபிக்கும் சான்றிதழ்.

குறிப்பு.—(i) சாதனங்களாயினும் சாதனங்களின் பிரதிகளாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தனுப்பப்படலாகா.
(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசினர் சேவையிலுள்ள தகுதியுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்கள/நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். எனினும், அவர்கள் விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை கல்வி அமைச்சின் செயலாளருக்கு நேரே அனுப்ப வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள், குறித்த திகதிக்கு முன் சம்மந்தப்பட்ட திணைக்கள/நிலையத் தலைவரால் பெற்றுக்கொள்ளப்பட்டு தாமதத்துக்குப் போதிய காரணம் காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு அவர் விதந்துரைத்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையும் இவ்வர்த்தமானியின் I ஆம் பாகம், (IIஅ) ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையுமான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

8. விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுதற்கான கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் அத்தகைய அறிவித்தலைப் பெறத் தவறும் எவ் விண்ணப்பதாரியும் அது பற்றி உடனே கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி தனது விண்ணப்பம் சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பவராவர்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1973 ம் ஆண்டு யூலை மீ 17 ந் உ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

($8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவுத் தாளில் தயாரிக்கப்பட வேண்டும்)

கல்வி அமைச்சு

**கட்புல, செவிப்புல உதவியாளர் பதவி**

1. முழுப்பெயர் (தெளிவாக எழுதவும்) :————.
2. நிரந்தர முகவரி :————.
3. சொந்த இடம் :————.
4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ள படி சரியான வயது : ........வரு. ........மா. ........நாள். பிறந்த திகதி :————.
5. பின்வருவோர் பிறந்த இடம் :—
   (அ) விண்ணப்பதாரி :————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் :————.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பூட்டன் :————.
6. பதிவு காரணமாகவா வம்சாவழி காரணமாகவா இலங்கையர் ? :————.
7. கல்வித் தகைமைகள் :—
   (i) சி. பா. த/க. பொ. த. பத்திரம் பற்றிய விபரங்கள்————. (வருடமும் பாடங்களும் உட்பட பெற்றுள்ள யாதேனும் திறமைச் சித்திகள்/விசேட சித்திகள் குறிப்பிடப்பட வேண்டும்)
   (ii) கட்புல, செவிப்புல வேலையிலும் சலனப்பட எட்டக வேலையிலும் பெற்றுள்ள அனுபவத்தை நிரூபித்தற்கான சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :————.

(iii) சிங்களத்தில்/தமிழில் சித்தி எய்திய அதியுயர்ந்த பரீட்சை பற்றிய விபரங்கள் :————.

8. வர்த்தமானி அறிவித்தலின் 5 ஆம் பந்தியின் (இ) ஆம் உப–பிரிவில் வேண்டப்படும் அனுபவம் பற்றிய விபரங்கள் :————.

9. விவாகம் செய்தவரா ? செய்யாதவரா, தாரமிழந்தவரா ? :————.

10. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) திகதி (ஆ) வழக்கு இலக்கம் (இ) குற்றத் தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் கொடுக்கவும் :————.

11. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு ? :————.

12. உம்மீது யாதேனும் ஒழுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் முழு விபரங்களையும் கொடுக்கவும் :————.

13. யுத்த சேவையிலிருந்து விலகியவராயின்—
(அ) படைக் கூற்றின் பெயர் :————.
(ஆ) வரிசைப் பதவி :————.
(இ) சேர்ந்த விலகிய திகதிகள் :————.

14. பாடசாலையிலிருந்து விலகிய பின் வகித்த உத்தியோகம் :—
(i) வகித்த பதவி :————.
(ii) சேவைக்கமர்த்தப்பட்ட காலம் :————.
(iii) விலகியதற்கான காரணம் :————.

15. இதற்கு முன் அரசினரின் கீழ் அல்லது உள்ளூராட்சிச் சபை ஒன்றின் கீழ் சேவை புரிந்திருப்பின், நிரந்தர முறையிலா அல்லது தற்காலிக முறையிலா, சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) நிலையம் (ஆ) சேவைக்கமர்த்தப்பட்ட காலம் (இ) சேவை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் :————.

16. தற்போதைய உத்தியோகம் :—
(i) நிலையம் :————.
(ii) பதவியும் தரமும் :————.
(iii) சேர்ந்த திகதி :————.
(iv) உபகாரச் சம்பள உரித்துடையவரா ? தற்காலிகமானதா ? சமயோசிதமா ? :————.
(v) தற்போதைய அடிப்படைச் சம்பளமும் சம்பள அளவுத் திட்டமும் :————.
(vi) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி :————.

17. ஏனைய விபரங்கள் :————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையும் என இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இங்கு நான் கொடுத்துள்ள விபரங்கள் எவையெனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவுக்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் எனவும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் ஒப்பம்.

திகதி :————

திணைக்கள/நிலையத் தலைவர் அத்தாட்சிப்படுத்தல்

எனது எண் :
உங்கள் எண் : பொ. நி/30

கல்வி அமைச்சின் செயலாளர்.

இவ்விண்ணப்பம், விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுதற்கான கடைசித் திகதிக்கு முன்*/பின் பெற்றுக்கொள்ளப்பட்டது.

..........ஆம் பந்திகளில் கொடுபட்டுள்ள விபரங்கள் சரியானவை*/பின்வரும் திருத்தங்களுக்கமையச் சரியானவை. விண்ணப்பம் இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றது.

————,
திணைக்கள/நிலையத் தலைவரின் ஒப்பம்.
பதவிப் பெயர் :————

திகதி :————

*(பொருத்தமற்றதைக் கீறிவிடுக)

7–1006—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### அரசாங்க ஆயுள்வேத மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களைச் சேர்த்தல்—1974

அரசாங்க ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியில், மருத்துவக் கலாநிதி டி. எ. எம். எஸ். பட்டப் பயிற்சி பெறுவதற்காக, மாணவர்களைச் சேர்த்தற்குரிய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். தகைமை பெற்றோர் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய விண்ணப்படிவங்களை தாமே தயாரித்து பிழையின்றி பூர்த்திசெய்து 1973 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 29 ஆம் நாளில் அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு **பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும்.** குறிப்பிட்ட நாளிற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

முகவரி : பதிவாளர்,
ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி,
பண்டாரநாயக்கபுரம்,
ராஜகிரிய.

2. **பயிற்சி நெறிகள்** :—மருத்துவக் கலாநிதி டி. எ. எம். எஸ்.பட்டத்திற்கான பயிற்சிநெறி மூன்று பிரிவுகளாக அமைந்திருக்கும்.

(i) ஆயுள்வேத பயிற்சி நெறி

(ii) சித்த பயிற்சி நெறி

(iii) யூனானி பயிற்சி நெறி

ஆயுள்வேதப் பயிற்சி நெறியானது, ஆயுள்வேத தேசிய சிகிச்சை முறைகளுக்கமைய சிங்கள மொழியிலும், சித்த பயிற்சிநெறியானது சித்த மருத்துவ முறைகளுக்கமைய தமிழ் மொழியிலும், யூனானி பயிற்சி நெறியானது யூனானி மருத்துவ முறைகளுக்கமைய ஆங்கில மொழியிலும் கற்பிக்கப்படும்.

3. தக்க தகைமைகள்உள்ள ஆண், பெண் இருபாலாரும் தாம் விரும்பும் பயிற்சி நெறியில்பயிற்சி பெற விண்ணப்பங்களை அனுப்பலாம். **சமயகுரவர்களின்** விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

4. **வயது**.—1974 ஆம் ஆண்டு தைத் திங்கள் முதலாம் நாளில் 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும்.

5. **கல்வித் தகைமைகள்** :—(i) க. பொ.த. சாதாரண தேர்வில் மொழி, கணிதம் உட்பட கீழே குறிப்பிடப்பட்ட பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி 6 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். அவ்விரு தடவைகளில் ஒரு தடவையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் அப்பாடங்கள் 4 ல் திறமைச்சித்தி பெற்றிருக்கவும் வேண்டும். அத்துடன்,

(ii) க. பொ. த. உயர் தேர்வில் இரு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

**குறிப்பு** :—

(அ) இரண்டு தலைமுறையாக ஆயுள்வேத/சித்த/யூனானி மருத்துவம் செய்யும் குடும்பத்தைச் சேர்ந்தவரென சமாதான நீதவான்/பகுதி இறைவரி உத்தியோகத்தரால் சான்றிதழ் பெற்றிருந்தால் ;

(ஆ) விஞ்ஞான பாடங்களில் சித்தி பெற்றிருந்தால் (க. பொ. த. சாதாரண அல்லது உயர்தரம்) ;

(இ) க. பொ. த. சாதாரண தேர்வில் சமஸ்கிருதம்/உருது முதலிய மொழிகளில் சித்தி பெற்றிருந்தால் அல்லது அம் மொழிகளில் அதற்கு சமனான தராதரம் பெற்றிருந்தால் விசேட சலுகை அளிக்கப்படும்.

(iii) க. பொ. த. உயர் தேர்வில் மேலதிகமாகச் சித்தி பெற்றிருக்கும் பாடங்கள், க. பொ. த. சாதாரண பாடங்களின் திறமைச் சித்திகளாகக் கொள்ளப்படும்.

(iv) க. பொ. த. உயர் தேர்வின் முடிபை எதிர் நோக்கியிருப்போரின் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும். எனினும் கல்லூரிக்கு சேர்வு அனுமதி பெறும் நாளிற்கு முன்னர் அத்தகுதியைப் பெறுவிடின் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

(V) **அங்கீகரிக்கப்பட்ட பாடங்கள் :**

| | | |
|---|---|---|
| சிங்கள மொழி | எண்ணிகதம் | வரலாறு |
| சிங்கள இலக்கியம் | பிரயோக கணிதம் | புவியியல் |
| தமிழ் மொழி | தூயகணிதம் | குடியியல் |
| தமிழ் இலக்கியம் | உயர்கணிதம் | பொருளியல் |
| ஆங்கில மொழி | பௌத்த சமயம் | சுகாதாரம் |
| ஆங்கில இலக்கியம் | இந்து சமயம் | விவசாயம் |
| சமஸ்கிருத மொழி | கிறீஸ்த்தவசமயம் | சித்திரம் |
| பாளி மொழி | இஸ்லாம் சமயம் | பொதுவிஞ்ஞானம் |
| உருது மொழி | இரசாயனம் | முதலியனவும் ஆயுள் வேத கலலூரி, மருத்துவச்சாலைச் சபை ஆகியவற்றால் அங்கீகரிக்கப்படும் க. பொ. த. சாதாரண தரத்திலான ஏனைய பாடங்களுமாம். |
| அராபி மொழி | பௌதிகம் | |
| | உயிரியல் | |
| | தாவரஇயல் | |

6. **புகுமுகத் தேர்வு .**—மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணபகாரர் எழுத்துப்பரீட்சை மூலமும், நேர்முகப் பரீட்சை மூலமும் தெரிவு செய்யப்படுவர். எழுத்துப்பரீட்சை பின்வரும் பாடங்களில் நடைபெறும் :—

(அ) கட்டுரை (1½ மணித்தியாலம்) புள்ளிகள் —100

(ஆ) மொழி (சிங்கள/தமிழ்/ஆங்கிலம்) (2 மணித்தியாலங்கள்) புள்ளிகள்—100

(இ) பொது அறிவு (1½ மணித்தியாலம்) புள்ளிகள்—100

**குறிப்பு** —(i) ஆயுள்வேத பயிற்சி பெற விரும்புவோர் சிங்கள மொழியையும், சித்த பயிற்சி பெற விரும்புவோர் தமிழ் மொழியையும், யூனானிப் பயிற்சியைப் பெற விரும்புவோர் ஆங்கில மொழியையும் போதனு மொழியாகக் கொள்வர்.

(ii) எழுத்துத் தேர்வில் போதிய புள்ளிகள் பெற்ற விண்ணப்பகாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

7. எழுத்துப்பரீட்சை புரட்டாதித் திங்கள் 3 ம் கிழமையில் நடாத்தப்படும். தேர்வு நடைபெறும் நாளும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும். (கல்லூரியில் ஓர் ஆண்டுக்கு அனுமதிக்கப்படும் தொகையினரை விட அதிகளவு பேர் விண்ணப்பஞ் செய்திருந்தால் மட்டுமே இத்தேர்வு நடாத்தப்படும்).

8. சகல விண்ணப்பங்களிலும் ரூபா 15 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டு 13 ம் பந்தியில் தரப்பட்டுள்ள தகுதியுடைய ஒருவரின் முன்னிலையில் தமது கையொப்பமிட்டு உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் முத்திரைக் கட்டணம் மீளக் கொடுக்கப்படமாட்டாது.

9. விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் :

(i) பதிவாளர் அதிபதி அல்லது மாவட்ட பதிவாளரினால் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்.

(ii) கல்வித்தகைமைகளின் சான்றிதழ்கள் (மூலப் பிரதிகளை அனுப்பக்கூடாது.)

(iii) தங்கள் பிரிவுக்குரிய கிராம சேவகரின் நற்சாட்சிப் பத்திரத்துடன் வேறு இரு நற்சாட்சிப் பத்திரங்களும்.

10. **அடையாள அட்டை.**—சகல விண்ணப்பகாரரும், தேர்வு மண்டபத்தினுள் ஒவ்வொரு பாடத்திற்கும் தோற்றும் போது, தமது அடையாளத்தைப் புலப்படுத்தப் பின்வருவனவற்றில் ஒன்றை வைத்திருக்க வேண்டும் :—

(i) அஞ்சல் அதிபதியினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை, அல்லது

(ii) அரசாங்கத் திணைக்களம் ஒன்றினால் வழங்கப்பட்ட தமது புகைப்படத்தினையும் கொண்ட சான்றிதழ் (ஐந்து வருடங்களுக் குட்பட்டதாக வேண்டும்). தமது அடையாளத்தைப் புலப்படுத்த சான்று சமர்ப்பிக்க முடியா விண்ணப்பகாரர்கள் தேர்வுக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

11. **புகுமுகக் கட்டணம்.**—கல்லூரியில் சேருவதற்குத் தெரிவு செய்யப்படும் மாணவர், மாணவியர் ஆயுள்வேதக் கல்லூரி மருத்துவமனை மன்றினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதிவுக்கட்டணமாக ரூபா 10 ம் நூல் நிலையம், ஆய்வு கூடம் ஆகியவற்றின் வைப்புப்பணமாக ரூபா 30 ம், செலுத்த வேண்டும்.

12. **விதிமுறைகளும் பாட நெறியும்.**—புதிய விதி முறைகளும் பாட நெறியும் அச்சிட ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதால், விரைவில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

13. விண்ணப்பகாரர் அனைவரும் தமது கையொப்பத்தைக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒருவரால் சான்று படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்:—

(i) சமாதான நீதவான்.

(ii) கல்லூரி அதிபர் அல்லது தலைமையாசிரியர்.

(iii) வருடத்திற்கு ரூபா 6,000 க்கு அதிகமாக திரட்டுச் சம்பளம் பெறும் ஓர் அரசாங்க உத்தியோகத்தர்.

14. **பாடநெறியும் பயிற்சிக் காலமும்.**—மருத்துவ கலாநிதி டி. ஏ. எம். எஸ. பாட நெறியிற்கான பயிற்சிக்காலம் 5 ஆண்டுகளாகும். அன்றியும் மருத்துவ மனைப் பயிற்சிக்காலம் ஓர் ஆண்டாகும்.

15. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களில் தவறான தகவல்களைத் தந்துள்ளார் என கல்லூரியில் சேருமுன்னர் அறியப்படுமிடத்து சேர்வு அனுமதி வழங்கப்படமாட்டாது. கல்லூரியிற் சேர்ந்த பின்னர் அறியப்படுமிடத்து கல்லூரியிலிருந்து விலக்கப்படுவார்.

எம். எஸ். பீ. குரேவித்தியாசேகர,
பதில பதிவாளர்.

ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி,
பண்டாரநாயக்கபுரம்,
ராஜகிரிய,
1973 ம் ஆண்டு ஆடித் திங்கள் 27 ஆம் நாள்.

அரசாங்க ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியில் மருத்துவ கலாநிதி டி. ஏ. எம். எஸ். பட்டப்படிப்புப் பெற சேர்வு அனுமதிகோரும் விண்ணப்பம்—1974

(வர்த்தமானி அறிக்கையை நன்கு படித்து, அதில் கொடுக்கப்பட்டுள்ள விரபங்களுக்கமைய விண்ணப்பங்கள் நிரப்பப்பட வேண்டும்)

1. முழுப்பெயர் :————.
   (i) சொந்தப்பெயர் :————.
   (ii) வேறுபெயர்கள் :————.
2. முகவரி :————.
3. பிறந்த நாள் :————.
   1974 ம் ஆண்டு தைத்திங்கள் 1 ம் நாள் .......... ஆண்டுகள் .............. மாதங்கள் .............. நாட்கள்.
4. பால் :————.
5. இனம் :————.
6. இலங்கை வம்சாவழியினரா/பதிவுப்பிரசையா :————.
7. திருமணமானவரா/அல்லாதவரா :————.
8. தந்தை/தாய்/பாதுகாவலரின் பெயர் :————.
   முகவரி :————.
9. கல்வி பெற்ற பாடசாலைகள்/கல்லூரிகள் :————.
10. சேர்வு அனுமதி பெறவிரும்பும் பயிற்சி நெறி :———— ஆயுள்/சித்த/யூனானி
11. கல்வித்தகைமைகள் :————

(I) க. பொ. த சாதாரணதேர்வு

| தேறிய ஆண்டு | மாதம் | சுட்டிலக்கம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | 1. ................ |
| | | | 2. ................ |
| | | | 3. ................ |
| | | | 4. ................ |
| | | | 5. ................ |
| | | | 6. ................ |
| | | | 7. ................ |
| | | | 8. ................ |

திறமைச்சித்திகள் :—

| | |
|---|---|
| 1. .................... | 5. .................... |
| 2. .................... | 6. .................... |
| 3. .................... | 7. .................... |
| 4. .................... | 8. .................... |

(II) க. பொ. த உயர்தேர்வு :—

| தேறிய ஆண்டு | மாதம் | சுட்டிலக்கம் | பாடங்கள் |
|---|---|---|---|
| .......... | .......... | .......... | .......... |
| .......... | .......... | .......... | .......... |
| .......... | .......... | .......... | .......... |
| .......... | .......... | .......... | .......... |

12. இணைக்கப்பட்டுள்ள கல்விச்சான்றிதழ்ப் பிரதிகள் :————

13. நற்சான்றிதழ் :— 1. ....................
    2. ....................

14. வேறுவிபரங்கள் (i) . . . . . . . . . . . . . . .

(ii) மருத்துவ பரம்பரையைச்சேர்ந்தவர் என்பதற் குரிய சான்றுகளைத்தவரவும் :————.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

ரூபா 15 பெறுமதியான முத்திரை ஒட்டி அதன் மேல் கையொப்பமிடவும்.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேதி :————.

மேலே குறிப்பிட்ட பெயருடைய திரு./செல்வி. . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . எனது பாடசாலை மாணவர்/அலுவலக உத்தியோகத்தர்/எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும் இன்று என் முன்னிலையில் தனது கையொப்பத்தையிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

விண்ணப்பதாரரது கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம் :————.

தேதி :————.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :————.

உறுதிப்படுத்தப்பட்ட இடம் :————.

பதவி :————

முகவரி :————.

7–964—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

**கல்வி அமைச்சு**

ஆசிரியர்களாகப் பயிற்சி அளித்தற்கான தெரிவு–விசேட பயிற்சிகள் 1974 ஆம் ஆண்டு

இப்பயிற்சி நெறிகள் சேவையிலுள்ள ஆசிரியர்களுக்கு மட்டுமே. இவை நிலையங்களில் நடைபெறுவனவாகவும் ஒவ்வொன்றும் 2 வருட அளவினதாகவும் அமையும். பொது ஒழுக்கத்திலும் கல்வி ஊக்கத்திலும் கலாசாலை அதிபருக்குத் திருப்தி அளிக்கத் தவறும் பயிற்சியாளர் ஒருவர் பயிற்சி நெறியிலிருந்து விலக்கப்படுவார். இது பற்றி, மகா வித்தியாதிபதியின் முடிபு இறுதியானதாகும்.

பயிற்சி நெறிக் காலத்தில் பயிற்சியாளர் ஒருவர் வேறு யாதேனும் வெளிப்பயிற்சி ஒன்றினைப் பின்பற்றுதற்கேனும் வெளிப் பரீட்சை ஒன்றிற்குத் தோற்றுதற்கேனும் சாதாரணமாக அனுமதிக்கப்படமாட்டார்.

2. **சேர்வு**.—(i) பின்வரும் வகுதிகளிடலங்கும் பரீட்சார்த்திகள் இப் பயிற்சி நெறிக்குச் சேர்க்கப்படமாட்டார்கள். அத்தகைய பரீட்சார்த்தி ஒருவர் அனுமதிபெறுமிடத்து, பயிற்சிக் காலத்தில் எந்நேரத்திலேனும் பயிற்சிக் கால முடிவிலேனும் அவரது அனுமதி செல்லுபடியற்றதாக்கப்படும்.

(அ) ஆசிரியர் கலாசாலை ஒன்றில் ஏற்கனவே யாதேனும் பயிற்சி பெற்றுவரும் அல்லது பயிற்சி பெற்ற அல்லது அஞ்சல் மூலம் பயிற்சி பெறும் பயிற்சியாளர்கள் ;

(ஆ) கீழ்க்காணும் 6 ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள சகல தகவுத்திறன் நிபந்தனைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்குமுன் திருப்தி செய்யாதவர்கள் ;

(இ) பட்டம் யாதேனும் பெற்றுள்ள ஆசிரியர்கள்.

(ii) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பயிற்சிச் செலவுக்கும், சம்பள லீவிலுள்ள ஆசிரியர்களாயின், சகல சகாயப் படிகளும் உட்பட இரு வருட சம்பளத்துக்கும் சமமான ஒரு தொகைக்கு ஓர் உடன்படிக்கையைச் செய்துகொள்வதற்கு வேண்டிய சாதனங்களை அவர் அனுமதிக்கப்படும் இருவார காலத்துக்குள் குறித்த ஆசிரியர் கலாசாலை அதிபரிடம் சமர்ப்பிக்கவேண்டும். மேலும்—

(அ) பயிற்சிக் காலத்தில் அரசியல் சம்பந்தமான முயற்சிகளில் ஈடுபட மாட்டாரெனவும் ;

(ஆ) எக்காரணத்தைக் கொண்டும் பயிற்சி நெறியைக் கைவிடமாட்டாரெனவும் ;

(இ) பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின், மகா வித்தியாதிபதியால் நியமிக்கப்படும் பாடசாலைகளில் தொடர்ச்சியாக 8 வருட காலத்துக்கு ஆசிரியராகச் சேவை புரிவாரெனவும் (அரசினரல்லாத பாடசாலை ஆசிரியர்கள் அதே முகாமையின்/அரசாங்கத்தின்கீழுள்ள பாடசாலைகளில் இதே முறையில் 8 வருட காலத்துக்குச் சேவை புரிவதாக முகாமையாளருடன்/அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ளவேண்டும் ;

(ஈ) திணைக்களத்துக்கு வெளியே எழும் எப்பதவிக்கும் அல்லது உடன்படிக்கையில் குறிப்பிடப்படும் சேவைக் காலத்தையும் கடமைப்பாடுகளையும் முற்றுகப் பூர்த்தி செய்யும்வரை படிப்பு லீவாக மேலதிக காலத்துக்கும் விண்ணப்பிக்கமாட்டாரெனவும் குறித்த உடன்படிக்கை மூலம் உறுதியளிக்கவேண்டும்.

(iii) மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் நியமனங்கள் பெற்றுள்ள ஆசிரியர்கள் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுமிடத்து, பயிற்சியைப் பூர்த்தி செய்தபின் நியமிக்கப்பட்ட மாவட்டத்திலேயே சேவை புரிதற்குக் கடமைப்பட்டவர்களாவர்.

3. **சம்பளம்**.—பயிற்சி நெறியைத் திருப்திகரமாகப் பூர்த்திசெய்து ஆசிரியர்களாக நியமனம்பெறும் பயிற்சியாளர்கள், புதிய நியமனத் திகதியன்று அவர்களுக்கு அமையும் சம்பள அளவுத்திட்டத்தில் அமர்த்தப்படுவார்கள்.

4. சிங்களத்துடன்/தமிழுடன் சி. பா. த. அல்லது க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திராத எப்பரீட்சார்த்தியும் சிங்கள/தமிழ் மொழி மூலம் நடைபெறும் ஒருபயிற்சி நெறிக்கு அனுமதிக்கப்படுதற்கு உரித்துடையராகார்.

5. பயிற்சி பின்வரும் விசேட பாடத்துறைகளில் அமையும் :—

(1) ஆங்கிலம்

(2) கணிதம்

(3) விஞ்ஞானம்

(4) கைப்பணிகள்

(5) வணிகவியல்

(6) மனையியல்

(7) உடற்கல்வி

(8) விவசாயம்

(9) நுண்கலைகள்

6. **தகவுத்திறன்**.—(அ) **பொது**.—பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க்காணும் தேவைகளைத் திருப்தி செய்யவேண்டும் :—

(i) நல்லொழுக்கம் உடையவராய் இருக்க வேண்டும் ;

(ii) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;

(iii) 1.1.74 அன்று 45 வயதுக்குக் குறைந்தவராக இருக்கவேண்டும் ;

(iv) 31.12.72 க்கு முன் ஆசிரியராக நியமனம் பெற்றிருக்க வேண்டும் ;

(v) மேலுள்ள 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சிங்கள/தமிழ் மொழித் தேவையைத் திருப்தி செய்யவேண்டும் ;

(vi) சிங்கள/தமிழ் மொழி, எண்ணிதம்/வாணிக எண்கணிதம்/கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட சி. பா. த. பத்திரப் பரீட்சையில் அல்லது குறித்த பாடங்களுட்பட 6 பாடங்களில் க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி சித்தி அடைந்திருக்க வேண்டும். எனினும் ஆங்கிலத்திலான அல்லது நுண்கலைகளிலான விசேட பயிற்சி நெறிக்கு அனுமதிகோருவோராயின் எண்கணிதத்தில்/வாணிக எண்கணிதத்தில்/கணிதத்தில் சித்தி கட்டாயமில்லை ;

(vii) குறித்த ஒரு பயிற்சி நெறிக்கான விண்ணப்பதாரி அப்பயிற்சி நெறிப்பாட ஆசிரியராகவோ அல்லது அந்தக் குறிப்பிட்ட பாடத்தில் போதனாசிரியராக/பரிசோதகராக கல்வி அமைச்சின்கீழ் நியமனம் பெற்றிருக்க வேண்டும். (உதாரணமாக, ஆங்கிலப் பயிற்சி நெறிக்கான ஒரு விண்ணப்பதாரி ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்றிருக்க வேண்டும்). நியமனக் கடிதத்தில் பாடம் குறித் துரைக்கப்பட்டிராவிடின், அப்பாடத்தை வாராந்தம் 15 மணித்தியாலங்களுக்குக் கூடுதலாக அவர் கற்பித்திருரென்பதை நிருபித்தற்குச் சான்று நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

**குறிப்பு.**—1952 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தொடக்கம் க. பொ. த. (சா. தர) பத்திர தனிப்பாடப் பரீட்சை ஆரம்பிக்கப்படுதற்கு முன்னர் சி. பா. த. பத்திரப் பரீட்சையில் தனித்தனி பாடங்களில் பெற்றுள்ள சித்திகள் கணிக்கப்படமாட்டா.

(ஆ) **விசேட**—வெவ்வேறு பயிற்சி நெறியைப் பொறுத்தவரையில் பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க்காணும் மேலதிக தகைமைகளையும் திருப்திசெய்யவேண்டும் :—

(அ) ஆங்கில பயிற்சி நெறி—

(i) ஆங்கில ஆசிரியர்க்கான 1 ஆம்/2 ஆம்/3 ஆம் வகுப்புத்தராதரப் பத்திரம் ; அல்லது

(ii) ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியராக 31.12.66க்கு முன் நியமனம் பெற்றிருக்க வேண்டும்.

(ஆங்கிலப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவர்களிலிருந்து தெரிவு செய்யப்படுபவர்கள் 1974 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். 1975 ஆம் ஆண்டு ஆசிரியர் கலாசாலையில் அனுமதிக்கப் படும் நோக்கத்துடன் அவர்கள் 1974 ஆம் ஆண்டில் ஆங்கில மொழியில் அஞ்சல் மூலப் பயிற்சியைப் பெறுவார்கள். எனவே, 1.1.75 அன்று 45 வயதுக்குக் குறைந்தவர்களே தெரிவு செய்யப்படுவார்கள்).

(ஆ) கணிதப் பயிற்சி நெறி—

(i) சி. பா. த. அல்லது க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சையில் தூயகணிதம், பிரயோக கணிதம், உயர்தர கணிதம் ஆகிய வற்றுள் இரண்டில் சித்தி ; அல்லது

(ii) சி. பா. த. அல்லது க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சையில் தூயகணிதம், பிரயோக கணிதம், உயர்தர கணிதம் ஆகிய வற்றுள் ஒன்றில் திறமைச்சித்தியுடன் பௌதிகவியலில்/இரசாயனவியலில் சித்தி ; அல்லது

(iii) க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் தூயகணிதத்தில்/பிரயோக கணிதத்தில் சித்தி.

(இ) விஞ்ஞானப் பயிற்சி நெறி—

(i) சி. பா. த. அல்லது க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சையில் தூயகணிதம், பௌதிகவியல் ஆகிய பாடங்களில் சித்தியுடன் இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல், உயிரியல் ஆகிய பாடங்களில் எவ்விரண்டிலும் சித்தி. தாவரவியலை அல்லது விலங்கியலை ஒரு பாடமாகக் கணிக்கும்போது உயிரியலை வேறு பாடமாகக் கணிக்கலாகாது. இந்நாலு பாடங்களுள் குறைந்த பட்சம் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியாக இருக்கவேண்டும் ; அல்லது

(ii) சி. பா. த. அல்லது க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சையில் கணிதத்தில் சித்தியுடன், பௌதிகவியலில் அல்லது இரசாயனவியலில் அல்லது உயிரியலில் க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் சித்தி ;

(ஈ) கைப்பணிகள் பயிற்சி நெறி—

(i) ஆண்களுக்கு :

சி. பா. த. அல்லது க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சையில் பின்வரும் நாலில் இரண்டு :—

(அ) மரவேலையில் சித்தி ;

(ஆ) உலோக வேலையில் சித்தி ;

(இ) கேத்திர கணித வடிவ முறை வரைதலில் சித்தி ;

(ஈ) பௌதிகவியலில் சித்தி.

(ii) பெண்களுக்கு :

சி. பா. த. அல்லது க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சையில் பின்வரும் நாலில் இரண்டு :—

(அ) நெசவு வேலையில் சித்தி ;

(ஆ) மட்பாண்ட வேலையில் சித்தி ;

(இ) கேத்திர கணித வடிவமுறை வரைதலில் சித்தி அல்லது வரைதலில் சித்தி ;

(ஈ) இரசாயனவியலில் சித்தி.

**குறிப்பு :**

(i) க. பொ. த. (சா. தர) சி. பா. த. பத்திரப் பரீட்சையில் கைப்பணிகளில் சித்திக்குப் பதிலாக, தேவையான கைப்பணிகளில் ஒன்றில் மூன்று வருடப் பயிற்சி நெறியைச் சித்திரமாகப் பூர்த்தி செய்ததன்பின் அரசாங்க நுண்கலைக் கல்லூரியால் வழங்கப்படும் தராதரப் பத்திரம் அல்லது இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரிக் கைத்தொழில் ஆசிரியர் தராதரப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும். எனினும், மேலுள்ள 6 (அ) (vi) இல் விதிக்கப்பட்டுள்ள பொதுத் தேவைகள் பற்றிய பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு பாடங்களை அல்லது சி. பா. த. பத்திரத்தைப் பூர்த்தி செய்யும் நோக்கங்களுக்கு இத்தராதரப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா ;

(ii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியாலும் கல்வி அமைச்சின்கீழுள்ள கனிட்ட தொழில்நுட்பப் பாடசாலைகளாலும் வழங் கப்படும் தொழிற் தராதரப் பத்திரம் பெற்றுள்ளவர்கள், மேற்படி பிரமாணங்களின் பிரகாரம் தேவையான கேத்திர கணிதப் பொறிமுறை வரைதல், மரவேலை அல்லது உலோகவேலை, நெசவு வேலை அல்லது மட்பாண்ட வேலை ஆகிய வற்றிலிருந்து குறித்த பாடங்கள் தொழிற் தராதரப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால் தான், அங்ஙனம் விலக்களிக்கப் படுவார்கள்.

(உ) வணிகவியல் பயிற்சி நெறி :—

(i) லண்டன் வாணிக மன்றத்தால் வழங்கப்படும் வாணிகவியல் (உயர்தர/கீழ்த்தர) தராதரப் பத்திரம் ; அல்லது

(ii) இலங்கைத் தொழிநுட்பக் கல்லூரியால் வழங்கப்படும் கணக்குப் பதிவாளர்களுக்கான (உயர்தர/கீழ்த்தர) வாணிகவியல் தராதரப் பத்திரம் ; அல்லது

(iii) பரீட்சைத் திணைக்களத்தால் வழங்கப்படும் வாணிகவியல் (கணக்குப் பதிவாளர்க்கான) தராதரப் பத்திரம் ; அல்லது

(iv) லண்டன் வாணிக மன்றத்தால் வழங்கப்படும் சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர்க்கான (உயர்தர/கீழ்த்தர) தராதரப் பத்திரத்துடன், க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில் கணக்கியலில் ஒரு திறமைச்சித்தியும் அல்லது உ. பா. த./க. பொ. த. (உயர்தர)ப் பத்திரப் பரீட்சையில் கணக்கியலில் ஒரு சித்தியும் ; அல்லது

(v) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியால் வழங்கப்படும் சுருக்கெழுத்தாளர்க்கான வாணிகவியல் (உயர்தர/கீழ்த்தர) தராதரப் பத்திரத்துடன் க. பொ. த. (சாதாரணதர)ப் பத்திரப் பரீட்சையில் கணக்கியலில் ஒரு திறமைச் சித்தியும் அல்லது உ. பா. த./க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் கணக்கியலில் ஒரு சித்தியும் ; அல்லது

(vi) பரீட்சைத் திணைக்களத்தால் வழங்கப்படும் வாணிகவியல் (சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர்க்கான) தராதரப் பத்திரத்துடன், க. பொ. த. (சாதாரணதர)ப் பத்திரப் பரீட்சையில் கணக்கியலில் ஒரு திறமைச் சித்தியும் அல்லது உ. பா. த./க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் கணக்கியலில் ஒரு சித்தியும் ; அல்லது

(vii) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் வர்த்தக டிப்புளோமாவிற்காய இரண்டாவது வருடப் பரீட்சையில் சித்தி அல்லது

(viii) கனிட்ட பல்கலைக் கழகம் ஒன்றால் வழங்கப்படும் வாணிகவியல் தகுதித் தேர்வுப் பத்திரம் ; அல்லது

(ix) வாணிக எண்கணிதம், பொருளியல், சுருக்கெழுத்துத் தட்டெழுத்து, கணிதம் ஆகிய 4 பாடங்களுள் ஒன்றில் க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கணக்கியல், வாணிகவியலும் நிதியும் ஆகிய பாடங்களில் உ. பா. த./க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் சித்தியும் ; அல்லது

(x) வாணிகவியல், வாணிக எண்கணிதம், பொருளியல், சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் ஆகியவற்றுள் ஒரு பாடத்துடனும் கணக்கியலுடனும் கூடிய சிங்கள ஆசிரியர் தராதரப் பத்திரம் ; அல்லது

(xi) சி. பா. த. அல்லது க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சையில் கணக்கியலிலும் வாணிக எண்கணிதம், கணிதம், வாணிகவியல் மூலங்கள், பொருளியல், சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் ஆகிய பாடங்களுள் இரண்டு பாடங்களிலும் சித்தி.

(1962 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் சுருக்கெழுத்திலும் தட்டெழுத்திலும் சித்தி அடைந்தவர்களைத் தவிர்ந்த ஏனையோரைப் பொறுத்தளவில் இவ்விருபாடங்களும் ஒருபாடமாகவே கணிக்கப்படும்).

(ஊ) மனையியல் பயிற்சி நெறி.—

பின்வருவனவற்றுள் ஒன்று :—

(i) சி. பா. த. அல்லது க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சையில் :—

(அ) மனையியல், வீட்டுப்பணி, தையல்வேலை ஆகியவற்றுள் இரண்டில் சித்தி. அவற்றுள் ஒன்று திறமைச்சித்தியாக இருக்க வேண்டும் ;

(ஆ) சுகாதாரமும் உடற்றொழிலியலும், சௌக்கியவியல், தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், பௌதிகவியல், உயிரியல் ஆகிய பாடங்களில் குறைந்த பட்சம் ஒன்றில் சித்தி.

(ii) குண்டசாலைப் பெண்கள் பண்ணைப் பாடசாலையால் இரு வருடபயிற்சி நெறியின் பின் வழங்கப்படும் (மனையியலும் தையல் வேலையும்கூடிய) விவசாய தராதரப் பத்திரம் ;

(iii) குண்டசாலைப் பெண்கள் பண்ணைப் பாடசாலையால் இருவருட பயிற்சி நெறியின் பின், வழங்கப்படும் கிராமாந்த வீட்டு முகாமையிலான தராதரப் பத்திரம் ;

(எ) உடற்கல்விப் பயிற்சி நெறி :—

(i) க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சையில் சுகாதாரமும் உடற்றொழிலியலும் எனும் பாடத்தில் அல்லது சௌக்கியவியலில் திறமைச் சித்தியுடன் பௌதிகவியலில், இரசாயனவியலில் அல்லது உயிரியலில் சித்தி (உயிரியலுக்குப் பதிலாக தாவரவியலும் விலங்கியலும் ஒன்றாகச் சேர்த்துக்கணிக்கப்படலாம்) ; அல்லது

(ii) ஆசிரியர்க்கான உடற்கல்விப் பயிற்சி நெறி ஒன்றினைச் சித்திகரமாகப் பூர்த்தி செய்தபின் சென்னை, சைதாப்பேட்டை வா. ஆ. கி. ச. கல்லூரியால் வழங்கப்படும் ஆசிரிய தராதரப்பத்திரம். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் விளையாட்டுத்துறையில் விசேட திறமை அடைந்துள்ளார் என்பதற்கு சான்று நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஏ) விவசாய பயிற்சி நெறி :—

(i) தராதரப் பத்திரமற்ற விவசாய ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் சி. பா. த. அல்லது க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சையில் விவசாயவியல், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல், உயிரியல் ஆகியவற்றுள் ஒன்றில் சித்தி ; அல்லது

(ii) அரசாங்க கமப் பாடசாலை ஒன்றில் விவசாயவியலில் ஆறுமாத காலத்திற்குக் குறையாத பயிற்சி.

(ஐ) நுண்கலைகள் பயிற்சி நெறி.—இப்பயிற்சி நெறி வரைதல், சங்கீதம், நடனம் எனும் மூன்று பிரிவுகளைக் கொண்டுளது :—

(i) வரைதல் பயிற்சி நெறி :

(அ) அரசினர் நுண்கலைக் கல்லூரியால் (வரைதலிலான 3 வருடபயிற்சி நெறியின் பின்) வழங்கப்படும் தராதரப் பத்திரம் ; அல்லது

(ஆ) சிங்கள/தமிழ்/ஆங்கில வரைதல் ஆசிரிய தராதரப்பத்திரம்.

(ii) சங்கீதப் பயிற்சி நெறி :—

(அ) லங்கா காந்தர்வ சபையால் வழங்கப்படும் சங்கீதத்திலான இறுதித் தராதரப் பத்திரம்/சங்கீதத்திலான அரசாங்க பரீட்சைப் பத்திரம் ; அல்லது

(ஆ) அரசினர் சங்கீதக் கல்லூரியால் வழங்கப்படும் இடைமாணித் தராதரப் பத்திரம் ; அல்லது

(இ) வட இலங்கை கீழைத்தேய சங்கீத ஆசிரியர் சங்கத்தால் வழங்கப்படும் சங்கீத (5 ஆந் தர) தராதரப் பத்திரம் ; அல்லது

(ஈ) இந்தியாவிலுள்ள யாதேனும் அங்கீகரிக்கப்பட்ட சங்கீத நிலையத்தால் வழங்கப்படும் சங்கீதத்திலான இடைமாணித் தராதரப்பத்திரம்.

(iii) நடனப் பயிற்சி நெறி :—

(அ) லங்கா காந்தர்வ சபையால் வழங்கப்படும் நடனத்திலான இறுதித் தராதரப் பத்திரம்/நடனத்திலான அரசாங்க பரீட்சைப் பத்திரம் ; அல்லது

(ஆ) அரசினர் நடனக் கல்லூரியால் வழங்கப்படும் இடைமாணித் தராதரப் பத்திரம் ; அல்லது

(இ) இந்தியாவிலுள்ள யாதேனும் அங்கீகரிக்கப்பட்ட நடனத்திலான இடைமாணித் தராதரப் பத்திரம்.

7. 6 (iv) ஆம் பந்தியின் நோக்கத்தின் பொருட்டு, இத்தெரிவுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியன்று ஓர் அரசினர் அல்லது வித்தியாதிபதியின் முகாமையிலுள்ள பாடசாலையில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஆசிரியர்களாகக் கருதப்படுவார்கள். அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட பாடசாலை ஒன்றில் நிரந்தர பணியாளர்களுள் அடங்குபவரும் வழமையான வகுப்புக்களில் வாராந்தம் 20 மணித்தியால வேலை செய்பவருமான ஆசிரியர்களும் ஆசிரியர்களாகக் கருதப்படுவார்கள். இந்நோக்கத்தின் பொருட்டு பின்வருவன அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட பாடசாலைகளாகக் கருதப்படும்.

(அ) கட்டணம் அறவிடும் பாடசாலைகளாக 1951 ஆம் ஆண்டு மாறிய உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் ;

(ஆ) கட்டணம் அறவிடாத தனிப்பட்ட பாடசாலைகளாக 1.12.60 அன்று மாறிய I ஆந் தர, II ஆந் தர பாடசாலைகள் ;

(இ) கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட பாடசாலைகளும் பிரிவெனுக்களும் ;

மேலுள்ள (இ) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தனிப்பட்ட பாடசாலைகளினும் பிரிவெனுக்களிலுமுள்ள ஆசிரியர்கள் தொடர்ச்சியாக 5 வருட கால சேவை புரிந்திருக்க வேண்டும்.

இம் மூன்று வகுதிகளிலும் அடங்கும் ஆசிரியர்கள், பயிற்சிக் காலத்தில் தமக்கு சம்பளம் அல்லது சகாயப்படி பாடசாலை முகாமையாளரால் வழங்கப்படுமெனவும் பயிற்சியின் பின் அதே முகாமையின்கீழ் திரும்பவும் வேலைக்கு அமர்த்தப்படுவார்களெனவும் சாதனமூல சான்றை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும். பயிற்சிக் காலத்தைப் பூர்த்தி செய்த பின் அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதை அவர்கள் எதிர்பார்க்கலாகாது.

8. **தெரிவுக்கான விண்ணப்பம்.**—(i) இவ்வறிவித்தலில் காணப்படும் மாதிரிப் படிவத்துக்கமைய விண்ணப்பப் படிவம் ஒன்று பரீட்சார்த்தியால் தயாரிக்கப்பட்டு, பூரணப்படுத்தப்பட்டு, விண்ணப்பஞ் செய்யப்பட வேண்டும். பயிற்சி நெறியைப் பின்பற்றவிருக்கும் மொழிமூலமே விண்ணப்பம் செய்யப்பட வேண்டும். அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவம் எதுவும் இவ்வமைச்சினுல் வழங்கப்படமாட்டாது. விண்ணப்பம் தயாரிக்கும்போது பின்வரும் தேவைகள் கண்டிப்பாகக் கவனிக்கப்பட வேண்டும். இவற்றைக் கவனிக்கத் தவறின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட வேண்டிநேரிடக்கூடும்.

(அ) விண்ணப்பப் படிவம் 16″ × 12″ அளவு முழுத்தாளில் தயாரிக்கப்படவேண்டும் ; வேறு எவ்வித கடுதாசியிலும் அல்ல ;

(ஆ) படிவம் தட்டெழுத்துப் பிரதியாக அமையலாம். படிவம் கையால் தயாரிக்கப்படின் கோடுகள் யாவும் சிவத்த மையிலும் பதிவுகள் யாவும் நீல அல்லது கறுத்த மையிலும் அமைய வேண்டும் ;

(இ) கூடுகள் யாவும், மாதிரிப் படிவத்திலுள்ள ஒழுங்கின் பிரகாரம் உரிய பக்கத்தில் வரையப்பட வேண்டும். எக்கூடும் மாற்றியமைக்கப்படவேனும் விடப்படவேனும் ஆகாது. கூடுகளை விவேகமான முறையில் இடைவெளிப்படுத்துவதுடன், அவை மிக நெருக்கமாக அமைதல் தவிர்க்கப்பட வேண்டும் ;

(ஈ) விண்ணப்பப் படிவத்தின் 6 ஆம் கூட்டில் பயிற்சி நெறிக்குப் பொருத்தமுடைய பாடங்கள் என்பன, க. பொ. த. (சா.தர), க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சைக்கு எடுத்தவையும் மேலுள்ள 6 (ஆ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சி நெறிகளுக்குப் பொருத்த முடையவையுமான பாடங்களைக் கருதும். உதாரணமாக, கணிதப்பயிற்சி நெறிக்குத் தேவைப்படுவது துயகணிதம், பிரயோக கணிதம், உயர்கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் பெற்ற தேர்ச்சி ;

(உ) மேலுள்ள 6 (ஆ) ஆம் பந்திக்கிணங்க, எப்பயிற்சி நெறிக்கான விண்ணப்பமும் ஆங்காங்கு கொடுபட்டுள்ள எத்தகைமை ஒன்றினதின் கீழ் செய்யப்படலாம். உதாரணமாக, ஆங்கில பயிற்சி நெறிக்கு 2 வெவ்வேறு தகைமைகளும், வணிகவியல் பயிற்சி நெறிக்கு 11 வெவ்வேறு தகைமைகளும், அதே போலவே வெவ்வேறு பயிற்சிநெறிகளுக்கு வெவ்வேறு தகைமைகளும் கொடுபட்டுள்ளன. விண்ணப்பப் படிவத்தின் 9 ஆம் கூட்டில், விண்ணப்பிக்கும் பயிற்சி நெறியையும் எத்தகைமைக்கிணங்க விண்ணப்பிக்கத் தகுதியுடையவரென்பதையும் குறிப்பிடுக.

உங்கள் கல்வித் தகைமைகளின் பிரகாரம், ஒரு பயிற்சி நெறிக்கான விதிக்கப்பட்டுள்ள தகைமைகள் ஒன்றிற் கூடுதலானவற்றிற்கு இணங்க நீங்கள் விண்ணப்பிக்க உரித்துடையவராயின், குறித்த வெவ்வேறு தகைமைகளையும் இவ்வறிவித்தலின் 6 (ஆ) ஆம் பந்தியில் கொடுபட்டுள்ள (i) (ii), (iii) அல்லது (அ), (ஆ), (இ) என்ற முறையில் தகைமைகள் காட்டப்படவேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் பூரணமாகவும் செம்மையாகவும் பரீட்சார்த்தியால் நிரப்பப்பட வேண்டும். பூரணமாகத் தயாரிக்கப்படாத விண்ணப்பம் ஒன்று அங்கு கொடுபட்டுள்ள விபரங்களின் சிறப்புக்கமையச் சீர்துக்கப்பட்டு நிராகரிக்கப்படக்கூடும். பின்வரும் விடயங்களுக்கு பரீட்சார்த்தியின் கவனம் கோரப்படுகிறது :

(அ) ஆசிரியர் ஒருவர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளபடி தனது பெயரைக் கொடுக்க வேண்டும் ;

(ஆ) விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் தற்போது வகிக்கும் நியமனத்தின் தன்மையை 6 (vii) ஆம் உப பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளவாறு, விண்ணப்பப் படிவத்தின் 9 ஆம் கூட்டில் காட்டவேண்டும். முதல் நியமனத் திகதியையும் ஆசிரியராகப் பதிவிலக்கத்தையும் 2 ஆம் கூட்டில் காட்டவும் வேண்டும் ;

(இ) விண்ணப்பதாரி ஆசிரியராயின், அவர் கடமைபுரியும் பாடசாலைத் தலைவர் மூலம் விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும் ;

(ஈ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம், விண்ணப்பிக்கும் பயிற்சி நெறி பற்றிய பின்வரும் விபரங்கள் தெளிவாக இடது பக்க மேல் மூலையில் எழுதப்பெற்ற காகித உறையில் வைக்கப்பட்டு அனுப்பப்படவேண்டும்

................................. விசேட பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் ;

(ஊ) விண்ணப்பம், 1973.8.20 அன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக கீழ்க்காணும் விலாசத்துக்குப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும் :—

வித்தியாதிபதி,
ஆசிரியர் கல்வி,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2.

(ஊ) விண்ணப்பப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமைபற்றி அறிவிக்கப்பட மாட்டாது ;

(எ) சாதனங்கள் ஒன்றும் விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பப்படலாகாது.

பி. உடகம,
மகா வித்தியாதிபதி

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2, 1973 ம் ஆண்டு யூலை மீ 13 ஆந் உ.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

**விசேட பயிற்சி நெறிகளில் ஆசிரியர்களாகப் பயிற்சி அளிப்பதற்கு நடைபெறும் பயிற்சியாளர் தெரிவுக்கான விண்ணப்பம்—1974 ஆம் ஆண்டு**

போதனாமொழி : சிங்களம்/தமிழ்

பால் : ஆண்/பெண்

விண்ணப்பிக்கும் விசேட பயிற்சி நெறி

1. விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டில் " × " என அடையாளமிடுக.
(ஒரு கூட்டில் மட்டுமே அடையாளமிடவேண்டும்)

| ஆங்கிலம் | கணிதம் | விஞ்ஞானம் | கைப்பணிகள் | வணிகவியல் | மனையியல் |
|---|---|---|---|---|---|
| ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |

நுண்கலைகள்

| விவசாயம் | உடற்கல்வி | வரைதல் | சங்கீதம் | நடனம் |
|---|---|---|---|---|
| ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |

2. (i) முழுப்பெயர் (சொந்தப் பெயர் முதல்) :———.
(ii) முதலெழுத்துக்களுடன் சொந்தப் பெயர் :———.

நியமனத் திகதி :———.

பதிவிலக்கம் :———.

3. விலாசம் :———.

பாடசாலை விலாசம் :———.
வகை : அரசினர்/கட்டணம் அறவிடும் தனிப்பட்ட/கட்டணம் அறவிடாத தனிப்பட்ட/அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட/பிரிவேனா :———.
மாவட்டம் :———.
தேர்தல் தொகுதி :

சொந்த விலாசம் :———.
மாவட்டம் :———.
தேர்தல் தொகுதி :———.

4. பிறப்பு :———.

பிறந்த திகதி :———.
மாவட்டம் :———.
தேர்தல் தொகுதி :———.

வயது : (1.1.74 அன்றுள்ளபடி)
வரு. :—. மா. :—. நா. :—.

உமது வயது அமையும் கூட்டில் "√" என அடையாளமிடுக.

| 18–23 | 23–28 | 28–32 | 32–40 | 40–45 |
|---|---|---|---|---|
| ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |

| 5. சித்தி எய்திய உயர் பரீட்சை விபரங்கள் அல்லது உயர்தொழில் தகைமைகள் | பரீட்சைப் பெயர் | தராதரப் பத்திர இலக்கம் | திகதி | சித்தி எய்திய பாடங்கள் |
|---|---|---|---|---|

| 6. க. பொ. த. பத்திரப் பரீட்சைப் பெறுபேறுகள் :———. | பரீட்சைப் பெயர் | வருடமும் மாதமும் | விண்ணப்பிக்கும் பயிற்சி நெறிக்குப் பொருத்தமுடைய பாடங்கள் | ஏனைய பாடங்கள் |
|---|---|---|---|---|
| * சாதாரண சித்தியை " சி " எனவும் திறமைச்சித்தியை " தி " எனவும் விசேட சித்தியை " வி " எனவும் குறிப்பிடுக. | க. பொ. த. (சா.தர) க. பொ. த. (உயர் தர) | | | |

7. சேவை விபரங்கள் :———.

| பாடசாலையின் பெயர் | விலாசம் | மாவட்டம் | நியமனத் திகதி | மாற்றத் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |

8. புற முயற்சிகள் :—
(அ) விளையாட்டுகள் :———.
(ஆ) சங்கங்கள் :———.
(இ) சமூக வேலை :———.

9. விண்ணப்பதாரியின் உறுதியுரை :—

இவ்விண்ணப்பப் படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையெனவும் ........................ ஆசிரியராக நியமனம் பெற்றேனெனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துவதுடன் வேண்டப்படுமிடத்து அவற்றைச் சாதனங்கள் மூலம் நிரூபிப்பேன் ....................................ப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் ........................................ஆம் தகைமைக் கிணங்கச் செய்யப்படுகிறது.

திகதி :———.

———,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

10. பாடசாலைத் தலைவர்/வட்டாரக் கல்வி உத்தியோகத்தர் அத்தாட்சிப்படுத்தல். மேற்குறித்த விண்ணப்பதாரி :—

(i) எனது பாடசாலையில்/வட்டாரத்தில் ஓர் உதவி ஆசிரியராக/தலைமை ஆசிரியராக இருக்கிறார்,

(ii) அவருடைய வேலை.................................தொடக்கம்.......................வரை திருப்திகரமானது,

(iii) தராதரப் பத்திரம் பெற்ற/தராதரப் பத்திரமற்ற ஆசிரியர்,

(iv) எனது முன்னிலையில் கைபொப்பமிட்டுள்ளார் என்பனவற்றை இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

திகதி : ————.

————,
பாடசாலைத் தலைவரின்/வட்டாரக் கல்வி உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயரும் உத்தியோக பதவிப் பெயரும் :————.

அலுவலக விலாசம் :————.

**குறிப்பு**.—படிவத்திற் பொருத்தமற்றவற்றைக் கீறிவிடுக.

7–1005—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப் படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை—1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| யூலை .. | 6.7.73 | வெள்ளி .. | 27.6.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 13.7.73 | வெள்ளி .. | 4.7.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 20.7.73 | வெள்ளி .. | 11.7.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 27.7.73 | வெள்ளி .. | 18.7.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| ஓகத்து .. | 3.8.73 | வெள்ளி .. | 25.7.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி .. | 1.8.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி .. | 8.8.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி .. | 15.8.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி .. | 22.8.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் .. | 7.9.73 | வெள்ளி .. | 29.8.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி .. | 5.9.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி .. | 11.9.73 | செவ்வாய் .. | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி .. | 19.9.73 | புதன் .. | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆடு ஒகத்து மீ 18 ந் உ

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.